## Volume 24

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

**(The Feast of the true sayings of God)**

அவரோடேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவன் இவைகளைக் கேட்டபொழுது, அவரை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம்பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான். (லூக்கா 14:15)

**THE SCRIPTURE FEAST MINISTRIES**

**REV: PAUL BENJAMIN**

**FOUNDER AND AUTHOR**

**REGD OFFICE:**

**NO:104, EXTN 7 , MAHA LAKSHMI NAGAR, NANDIVARAM, GUDUVANCHERY, KANCHIPURAM DIST CHENNAI 603 202 . TAMIL NADU, SOUTH INDIA**

**Mobile : + 91 94456 35860 +91 73583 23277**

**Web : www.scripturefeast.net, Blog : www.scripturefeast.info**

**Email: scripturefeast@gmail.com**

**FOREWORD**

**PASTOR : A. THOMAS RAJ**

**PRESIDENT, APOSTOLIC CHRISTIAN ASSEMBLY**

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து ஊழியங்கள்

1.பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையிலானவைகள்

2.பல ஆங்கில பதிப்பு வேதாகமத்துடன் ஒப்பிடக்கூடியவைகள்

3.தேவ நாமத்துடன் பல தேவ தரிசனங்கள் ஒருங்கிணைக்கப் பட்டவைகள்.

4.பெரிய மதங்களையும் அதன் உட்பிரிவுகளையும் உள்ளடக் கியவைகள்.

5.வேதத்தின் அடிப்படை உபதேசங்களை அஸ்திபாரமாகக் கொண்டவைகள்

6. மெய்யான தேவ ஞானத்தை எளிமையாக கற்றுக் கொள்ளும் வழி முறைகள்.

7.தேவனால் முன் குறிக்கப்பட்டவர்களுக்கு ஜெயங்கொள்ளு வதற்காக தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து.

8.வேதாகம மையக்கருத்துக்கள் அதன் இணையான தேவ வார்த்தைகளுடன் இரண்டறக் கலப்பவைகள்.

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகம்- தலைப்பு இருபத்தி நாண்கு

## தேவன் மனிதனுக்கு கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தில் முடிவடைகிறது.

# The Scripture Feast Ministries (Regd)

Rev Paul Benjamin, Founder and Author

TSFM

For the Predestinate Conquering

@ One among the 1000 generation
The Bride in 1000 years kingdom

**REGD OFFICE:**

**NO:104, EXTN 7, MAHA LAKSHMI NAGAR, NANDIVARAM,**

**GUDUVANCHERY, KANCHIPURAM DIST CHENNAI 603 202 .**

**TAMIL NADU, SOUTH INDIA**

## மதிப்புரை / Foreword

*JESUS NEVER FAILS*
*"TO MAKE READY A PEOPLE PREPARED FOR THE LORD"*

**APOSTOLIC CHRISTIAN ASSEMBLY**

'Speak evil no man (Titus 3:2)' (Regd.No. 80 of 1957) 'Follow peace with all men (Heb. 12.14)'

**Founder : Pastor G. SUNDRAM** **Chief Pastor : M.K.SAM SUNDARAM**

| | | |
|---|---|---|
| **Pastor . A. THOMASRAJ** | **G.SUKUMAR SAMUEL** | **K.R. SELWIN** |
| President | Hon.secretary | Treasurer |

*The grass withers, the flower fades,*
*But the word of our God stands forever. " Isa. 40:8*

The Word of God is blameless, faultless, without defect, deserving no censure. And the Word of God has to be Preached to all People. All over the Earth with conviction and clarity for the edification of the hearers.

Careful study and meditation of the Scriptures when undertaken with the grace of God depending on the Holy Spirit's guidance will bring hidden truths to light.

The work and efforts of Bro. Paul Benjamin in this regard is commendable. I appreciate his passionate toil in the Lord's Kingdom. My prayers are that his teaching and writing will profit and prepare many for the coming of our Lord and savior Jesus Christ. Amen.

Pastor A. Thomasraj
President
Apostolic Christian Assembly

No. 26. Shanmugarayan Street, Purasawalkam, Chennai – 600 007. ☎ : 26622775/ 26635583
Email :- info@acapryaerhouse.org, Web site : www. acaprayerhouse.org

# முன்னுரை

மனிதன் மாம்ச சரீரத்தில் வாழ்வதற்கு அவனுக்கு காற்று,தண்ணீர், போஜனம், வஸ்திரம், குடியிருப்பு எப்படி ஒவ்வொருவருக்கும் அடிப்படை முக்கியமான தேவைகளோ; அது போலவே ஆவிக் குரிய மனிதன் வாழ்வதற்கு இந்த ஐந்து அடிப்படை தேவைகள் ஆவிக்குரிய நிலையில் தேவனுடைய வார்த்தைகளின் மூலம் மிக முக்கியமானது. இவைகளை உள்ளான ஆவிக்குரிய மனிதனின் ஐந்து ஆவிக்குரிய அடிப்படை தேவைகளை; புறம்பான மனிதனின் ஐந்து அடிப்படை தேவைகளோடு ஒப்பிட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| மாம்ச சரீரத்தின் தேவைகள்:- | | ஆவிக்குரிய சரீரத்தின் தேவைகள்:- |
|---|---|---|
| ஜீவ சுவாசம் | 1 | பரிசுத்த ஆவி |
| தண்ணீர் | 2 | நித்திய ஜீவத்தண்ணீர் |
| போஜனம் | 3 | நித்திய ஜீவ வார்த்தைகளின் போஜனம் |
| வஸ்திரம் | 4 | நீதியின் வஸ்திரம் |
| குடியிருப்பு | 5 | பரலோக வாசஸ்தலம் |

இவைகளை உட்கொள்ளும் அளவு அவரவர் தன்மைக் கேற்றபடி மாறுபடுகிறது. இந்த ஐந்து தேவைகள் குறையும்போதோ, அல்லது தேவைப்படும் போதோ, சரீரமானது இவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது. எப்படி மாம்ச சரீரம் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறதோ, அது போலவே

ஆவிக்குரிய சரீரமும் இவைகளை ஆவிக்குரிய நிலை யில் அவரவர் தன்மைக்கேற்றபடி பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது.

மனச்சாட்சியை தேவன் மனிதனுக்கு கொடுத்து அதன் மூலம் எப்பொழுது வேண்டுமானாலும் அவன் தேவனுடன் ஆவியில் தொடர்பு கொண்டு தன்னுடைய ஆத்துமாவின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம், மேலும் இவைகளுக்காக மனச்சாட்சியில் அறிவு, புத்தி, ஞானம் இவைகளை தேவன் மனிதனுக்கு அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். ஒருவன் தன் ஆத்துமாவின் தேவைகளை சந்திக்கும்படி நீண்ட தூரம் பயணம் செய்யவோ அல்லது மிக கடினமாக வேலை செய்யவோ தேவையில்லை.

ஆத்துமாக்களின் பிதாவாகிய தேவன் மனிதனுக்கு மிக அருகிலும் மிக எளிமையாகவும் தன் ஆத்துமாவின் தேவைகளை சந் திக்கும்படி தேவ வார்த்தைகளை தேவன் நமது இருதயத்திற்கும் வாய்க்கும் சமீபமாக வைத்திருக்கிறார்.

மனச்சாட்சியில் தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள் வது பொதுவான இரட்சிப்பு, மேலும் இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை ஏற்றுக் கொள்வது விசேஷ இரட்சிப்பு

விசேஷ இரட்சிப்பின் ஆவிக்குரிய நிலமைகள்:-

1.ஜலத்தினால் மறுபடியும் பிறப்பு/ தேவனுடைய வார்த்தைகளினால் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்தை விசுவாசக் கண்களால் பார்ப்பது.

2. ஆவியினால் மறுபடியும் பிறப்பு / தேவனுடைய வார்த்தைகளினாலும் பரிசுத்த ஆவியினாலும் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்ளே விசுவாசக் கண்களால் பிரவேசிப்பது.

3. மறுபடியும் பிறந்தவர்களுக்கு களங்கமில்லாத ஞானப்பால்/ மறுபடியும் பிறந்தவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சியடைய கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்கள்.

4. பலமான ஆகாரம்/ தீமையை வெறுத்து, நன் மையை அறிந்து கொள்ளும் அறிவில் பூரண வளர்ச்சியடைந்து நீதியின் வசனத்தை பகுத்தறியும் ஞானத்தை அடைதல்.

5. பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள் / உவமைகளின் இரகசியங்களை அறிந்து கொள்ளுவதினால் தேவ னுடைய இராஜ்ஜியத்தில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவ சித் தத்தை / பங்களிப்பை அறிந்து கொள்ளுதல்.

6. தங்களுடைய விசுவாச உடன்படிக்கையில் நிலைத்திருந்து முன் னேறும் போது அவர்கள் பரலோக இராஜ்ஜியத்தில் தேவனுடைய சித் தத்தையும் அதன் விசுவாச அளவுப் பிரமாணத்தையும் அறிந்து கொண்டு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல்

7. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து/ இயேசு கிறிஸ்து, இராஜாவாக முடிசூடப்படும் பட்டாபிஷேக விழா வில் கலந்து கொண்டு தேவனுடைய சத்தியமான

வசனங்களை விருந்தாக புசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆட்சியின் பதவியை பரிசாகப்பெற்று, அல்லேலூயா என்று கெம்பீர சத்தத்தோடு ஆரவாரம் செய்து தேவனை மகிமைப்படுத்துதல்.

8. மரணத்தை ஜெயமாக விழுங்குதல்/தேவனுடைய சத்தியமான நித்திய ஜீவ வசனங்களின் அறிவில் மறு ரூபமடைந்து அதன் கிரியைகளின் மூலம் அழிவுள்ளது அழியாமை யையும் சாவுள்ளது சாவாமையும் தரித்துக் கொள்ளும் போது மரணம் ஜெயமாக விழுங்கப்படும்.

பொதுவான இரட்சிப்பும் மற்றும் விசேஷ இரட்சிப்பின் வளர்ச்சிப் படிகளும் மிக எளிமையான முறையில் தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டு புரிந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய கிருபையினால் இந்த தேவனுடைய சத்தியமான வசனங்களின் விருந்தை பல ஆங்கில மொழிப் பதிப்பு வேதாகமங்களுடனும் மற்றும் அவரவர் சொந்த தாய்மொழி வேதாகமங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்க்க தரிசன வசனங்களின்படி ஜலத்தினால் சமுத்திரம் நிறைந்திருப்பது போல பூமி கர்த்தரைக் குறித்து அறிகிற அறிவால் நிறைந்திருக்கும் என கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

இந்த தீர்க்க தரிசன வசனத்தின் படி இந்த வசனங்களை வாசிக்கிறவன், கேட்கிறவன் இதில் எழுதியுள்ளவற்றை கைக்கொள்கிறவன் பாக்கியவான். இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி ஏற்கனவே உங் களுக்கு அறிவிக்கப்பட்ட தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டே மீண்டும் இவைகள் இப்பொழுது; பத்து தேவனுடைய வார்த்தைகளின் தலைப்புக்களின் மூலம் விவரிக்கப்பட்டு, உங்களுக்கு அறிவிக் கப்பட்டு வருகிறது.

இந்த தீர்க்கதரிசன வசனத்தின்படி பொதுவான இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் எழுதும்போது, பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைக்குறித்து எழுதுவது நலமாக கண்டது இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி தங்களது பெயர் பூமியில் எழுதப்படாமலும், ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்ட பெயர் அழிக்கப்படாமலும், ஞாபக புஸ்தகத்தில் பெயர் எழுதப்படும் படியாகவும் இவைகளை மீண்டும் ஞாபகப் படுத்திக்கொள்வோம் ஆமென்.

## ஆசிரியர் உரை

மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் இராஜாவாக வெளிப் படப்போகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எங்களின் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் உள்ள விசுவாசத்தில் தங்களுடைய முழு நம்பிக்கையையும் வைத்து, அவருடன் விசுவாச உடன்படிக்கை செய்து, அவரை

ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களையும் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து அவர் இராஜாவாக முடிசூட்டப்படும் தன்னுடைய பட்டாபிஷேக விழாவிற்கு அழைத்து அவர்களுக்கு தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாகக் கொடுத்து, அவர்களின் கிரியை களின்படி பிரதிபலனை பரிசாக அளிக்கிறார்.

இந்த நற்செய்தியை தேவனுடைய தரிசனமாகவும், அழைப் பிதழாகவும் எழுதி அனுப்பி இதன் பயனாக தேவனால் முன் குறிக் கப்பட்ட பரிசுத்தவான்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு உத்தமமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும் ஊழியத்தை செய்கிறவர்களாக, இந்த தலைமுறையில் எழும்பும்படி நாங்கள் தரிசனம் நிறைவேற ஜெபத்துடன் ஊழியம் செய்து கொண்டு வருகிறோம்.

தேவ வார்த்தைகளை கண்டு, கேட்டு, உணர்ந்து கொண்டபடியால்; தேவன் எனக்கு பகிர்ந்த விசுவாச அளவின்படி தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக மனம் புதிதாகிறதினாலே ஆவியில் மறுரூபம் அடைந்து தேவ தரிசனத்தைப் பெற்றேன்.

தரிசனம் :- கர்த்தர் எனக்கு பிரதியுத்திரமாக : நீ தரிசனத்தை எழுதி, அதை கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகையிலே தீர்க்க மாக வரை.

எழுத்தின்படி பொருள் :- காகிதம், தோல்சுருள், கற்பலகை உலோகத்தினாலான பலகை இவைகளில் தேவ தரிசரினத்தை எழுதி அறிவிப்பது.

ஆவியின்படி பொருள் :- தேவ வார்த்தைகளை வாசிப்பது, கேட்பது, ஆலோசனையாக ஏற்றுக்கொள்வது, விசேஷ பயிற்சிகளினால் உணர்ந்து கொள்ளுவது ஆகியவற்றின் மூலம் சதையாகிய இருதயப்பலகையின் மேல் தேவ தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

ஞான அர்த்தத்தின்படி பொருள் :- கணினியின் கடந்தோடுகிற திரையில் தரிசனத்தை வாசிக்கும்படி கணினியின் விசைப்பலகை யிலே தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

தரிசனத்தை மிக சுருக்கமாகவும், வெளிப்படையாகவும், வேதத்தில் உள்ளபடி அவரவர் கேட்டறியும் அளவிற்கேற்றபடி எழுதி, அவைகளை எழுத்தின்படி, ஆவியின் படி, ஞான அர்த்தத்தின்படி ஆகிய மூன்று வழிகளிலும் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தில் பங்கடையும்படி அழைப் பிதழ்களை அனுப்பும் இந்த ஊழியத்திற்காக தேவைகள் அநேகம் உண்டு.

இப்படிப்பட்ட பல கிருபை வரங்கள், ஊழியதரிசனங்கள் மற்றும் பல ஆசீர்வாதங்கள், தேவனுடைய சித்தத்தின்படி கிறிஸ்து வின் அவயவங்களான நமக்கு தேவ ஆவியானவர் பகிர்ந்து கொடுத் திருக்கிறார்.

கிறிஸ்துவாகிய தலையைப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவின் அவயவமான எங்கள் ஊழியம் அதன் முழு பெலத்துடன் பொரு ளாதார ஆசீர்வாதங்களை பெற்று செயல்பட முயற்சி செய்து பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. மற்ற கிறிஸ்துவின் அவயவங்களான நீங்களும் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல எங்களுக்கு உதவி செய்யும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தேவன் பகிர்ந்து கொடுத்த சித்தத்தை நிறைவேற்றும்படி கிறிஸ்துவின் அவயங்களை இசைவாகக்கூட்டி இணைக்கப்பட்டு ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவிற்குத்தக்கதாக கிரியைகளை செய்யும் போது; அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாகு வதற்கேதுவான முழு சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. இப்படி ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறை வேற்றி தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம். அல்லேலூயா, ஆமென்.

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின்
## விருந்து புஸ்தகம்- தலைப்பு இருபத்தி நாண்கு

## தேவன் மனிதனுக்கு கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தில் முடிவடைகிறது.

## பொருளடக்கம்

1-0 ஆதாமின் குமார்களாகிய காயீனும் ஆபேலும், தங்களுடைய காணிக்கையை கர்த்தருக்கு பலிசெலுத்துகிற விசுவாசத்தில், கருத்து வேறுபட்டதின் மூலம் காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான்;

அப்பொழுது தேவனாகிய கர்த்தர் மனிதனுக்கு கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்குகிறது:-

2-0 காயீனும், காயினின் வழிகளில் நடக்கிற அவனுடைய சந்ததிகளும், தேவன் அங்கிகரிக்காத .காணிக்கைகளை பலிபீடத்திற்கு கொண்டுவருகிறபோது: தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட சாபங்களின் மூலம் அடையாளம் கண்டுபிடிக்கிறவர்கள் யாரும் அவர்களை கொல்லாதபடிக்கு; தேவனுடைய முத்திரை அடையாளத்தை போட்டார்:-

3-0 இரண்டாம் ஆதாமாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, பலிபீடத்தின் ஊழியம் செய்து, அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, நாம் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டபோது; முதலாம் ஆதாமின் மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பின் சாபங்கள் நீக்கப்படுகிறது:-

4-0 ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்:-

5-0 சீயோன் மலையில் உள்ள ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமின் தேவனுடைய ஆலயத்திலும், பலிபீடத்திலும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்:-

6-0 தேவனுடைய பரிசுத்த ஸ்தலம், மற்றும் மகா பரிசுத்த ஸ்தலம் அல்லது பலிபீடத்தின் ஊழியத்தை நிறைவேற்றுகிற ஆவிக்குரிய யூதர்களுக்கு விசேஷமாக உபத்திரவ காலத்தில் பல நன்மைகளை செய்து, ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரத்திலிருந்து, தேவனை மகிமை படுத்துகிற புறஜாதிகளின் ஆசீர்வாதங்கள்:-

7-0-0 கிறிஸ்துவின் மணவாட்டி சபையும், அவர்கள் பெற்றெடுத்த தேவபக்தியுள்ள சந்ததிகளும் இணைந்து தேவனுடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதற்காக, தேவனுடைய இராஜ்யத்தின் சிங்காசனங்களை பூமியில் ஸ்தாபிக்க போராடுகிறபோது; ஆதாமின் மனைவியாகிய ஸ்திரீக்கு, கொடுத்த சாபங்கள் நிறைவேறி முடிவடைகிறது:-

8-0-0 சாத்தான் குடிகொண்டிருக்கிற சிங்காசனங்களை, பூமியில் ஸ்தாபிக்கப்பட்ட நிலையிலே தொடர்ந்து நிலைத்திறுத்துவதற்காக: அந்திக்கிறிஸ்துவின் மணவாட்டி சபையும், அவர்கள் பெற்றெடுத்த தேவபக்தி இல்லாத விபச்சார சந்ததிகளும்; போராடுகிறபோது, ஸ்திரீயை வஞ்சித்த சர்ப்பமாகிய சாத்தானுக்கும், கொடுத்த சாபங்கள் நிறைவேறி முடிவடைகிறது:-

## தேவன் மனிதனுக்கு கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தில் முடிவடைகிறது.

தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கும், ஆதாமின் மனைவியாகிய ஸ்திரீக்கும், ஸ்திரீயை வஞ்சித்த சர்ப்பமாகிய சாத்தானுக்கும், கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தின் தொடர்புடைய ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் முடிவடைகிறது.

1-0 ஆதாமின் குமார்களாகிய காயீனும் ஆபேலும், தங்களுடைய காணிக்கையை கர்த்தருக்கு பலிசெலுத்துகிற விசுவாசத்தில், கருத்து வேறுபட்டதின் மூலம் காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான்; அப்பொழுது தேவனாகிய கர்த்தர் மனிதனுக்கு கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்குகிறது:-

காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்.

காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கிகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது. அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது? நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார். Gen 4:3-7

காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான்; அவர்கள் வயல்வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான். கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்; அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான்.

அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது. இப்பொழுது உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக் கொள்ளத் தன் வாயைத் திறந்த இந்தப் பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய். நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய் என்றார். Gen 4:8-12

அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது. இன்று என்னை இந்தத் தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்; நான் உமது சமுகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன்; என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே என்றான்.

அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: காயீனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழு பழி சுமரும் என்று சொல்லி; காயீனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்றுபோடாதபடிக்குக் கர்த்தர் அவன்மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார். Gen 4:13-15

2-0 காயீனும், காயினின் வழிகளில் நடக்கிற அவனுடைய சந்ததிகளும், தேவன் அங்கிகரிக்காத .காணிக்கைகளை பலிபீடத்திற்கு கொண்டுவருகிறபோது: தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட சாபங்களின் மூலம் அடையாளம் கண்டுபிடிக்கிறவர்கள் யாரும் அவர்களை கொல்லாதபடிக்கு; தேவனுடைய முத்திரை அடையாளத்தை போட்டார்:-

ஆபேலின் வழிகளில் நடக்கிற அவனுடைய சந்ததிகளான நீதிமான்கள், தங்களுடைய காணிக்கையை கர்த்தருக்கு பலிசெலுத்த வருகிறபோது: காயினின் வழிகளில் நடக்கிற அவனுடைய சந்ததிகளான துன்மார்க்களிடமிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளுவதற்காகவும், காயின் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட சாபங்களின் மூலம் காயினை அடையாளம் கண்டு கொள்ளுகிறவர்கள் யாரும் காயினைக் கொல்லாதபடிக்கும்;

தேவனே காயின் மேலும் காயினின் வழிகளில் நடக்கிற அவனுடைய சந்ததிகளின் மேலும் பழிவாங்குவதற்கும்  பலன் அளிப்பதற்கும் தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களில் முதலாவது தேவனுடைய முத்திரை அடையாளத்தை தேவனே நேரடியாக காயினுக்கும் அவன் சந்ததியாருக்கும் போடுகிறார்.

2-1 காயினின் அடையாளத்தை காட்டிக்கொடுக்கும் தேவனுடைய சாபங்கள்:-

1. காயின் தன் சகோதரனாகிய ஆபேலை கொலை செய்ததும் அல்லாமல், காயின் தன்னுடைய ஆத்துமாவையும் கொலை செய்தபடியால், ஏற்கனவே ஆதாமினால் ஒரு முறை தேவனால் சபிக்கப்பட்ட பூமி மீண்டும் காயினின் பாவத்தினால் இரண்டாவது முறையாக சபிக்கப்படுகிறது, இதனால் காயினும் அவன் சந்ததியாரும் சபிக்கப்பட்டிருப்பார்கள். Gen 4:11,

2. காயின் நிலத்தை பயிரிடும் போது / தன்  இருதயத்தில் தேவ வார்த்தைகளை விதைக்கும்போது அது தன் பலனை இனி காயினுக்கு கொடுக்காது. Gen 4:12,

3. காயின் தேவனுடைய சமுகத்தை விட்டு, விலகி மறைந்து, பூமியில் தன் கைகளின் கிரியைகளில் நிலையற்று அலைகிறவனாக இருப்பான். Gen 4:13-14, Jer 4:1-4,

கீழே குறிப்பிட்ட வேத வசனங்களின்படி காயினின் வழிகளில் நடக்கிற அவனுடைய சந்ததிகள், மார்க்கம் தப்பி நடக்கிற நட்சத்திரங்களாக இருந்து, ஆபேலைப் போல உள்ள நீதிமான்களின்  இரத்தப்பழிக்கு ஆளாக மாறுகிறார்கள். Jud 1:10-13, Mat 23:35-36, Mat 23:13-15, Lev 21:18, Deu 27:18, Isa 42:18-19, Mat 15:14, Rom 2:19, Rev 3:17-18, Jer 2:20-25, Jer 14:10-12, Jer 14:13-15,

காயினின் சந்ததியார், ஆதாமிற்கும், காயினுக்கும் தேவன் கொடுத்த சாபங்களையே மீண்டும் தேவனுக்கு காணிக்கையாக பலிபீடத்திற்கு கொண்டு வருகிறபோது, பலி பீடத்தின் தூதனால் நியாயத் தீர்க்கப்படுவார்கள். Exo 29:37, Exo 30:29, Lev 10:1-3, Rev 8:1-6, Rev 19:1-4,

விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச்  செலுத்தினது போல, ஆவிக்குரிய ஆபேலின் சந்ததிகளும்  தேவன் நல்லது என்று குறிப்பிட்டவைகளை தங்களுடைய  விசுவாசத்தில் கண்டறிந்து,

அவைகளை கர்த்தருக்கு பலி செலுத் தாமல் இருக்கும்போது, சாபம் / பாவம் உன் இருதய வாசற்படியில் பலி மிருகமாக கட்டப்பட்டு படுத்திருக்கிறது, நீ அவைகளை உன் இருதயத்தில் பலி செலுத்தினால் சாபம் / பாவத்தின் ஆசை உன்னை பற்றி இருக்காது, மேலும் நீ பாவத்தை / சாபத்தை ஜெயங்கொண்டு, அவைகளை உனக்கு கீழ்படுத்தி நீ அவைகளை ஆண்டு கொள்ளுவாய், இதனால் உன்னையும் உன் பலியையும் கர்த்தர் அங்கிகரிப்பார்.

உன் சாபத்தை / தீமைகளை பாவத்தை உன் இருதயத்தில் பலி செலுத்தி, அவைகளை உனக்கு நன்மையாக மாற்றிக் கொள்ள ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்திருந்தும், அவைகளை உன் இருதயததில் பலி செலுத்தாமல் இருக்கும்போது; உன் இருதய வாசற்படியில் பலி மிருகமாக கட்டப்பட்டிருந்த சாபம் / பாவம் / தீமை கட்டவிழ்க்கப்பட்டு உன் இருயத்திற்கு உள்ளே பிரவேசிக்கிறது. அப்பொழுது சாபம் / தீமை / பாவம் /ஆசை, உன்னை பற்றியிருக்கும், நீ அவைகளுக்கு அடிமையாக இருப்பாய், அவைகள் உன்னை ஆட்சி செய்யும்.

4. காயினே உனக்கு ஏன் எரிச்சல் உண்டானது ? Gen 4:6,

காயினுடைய இருதய வாசற்படியிலே பலி மிருகமாக கட்டப்பட்டிருந்த சாபம் / பாவம் கட்ட விழ்க்கப்பட்டு காயினுடைய இருதயத்திற்குள்ளே, பிரவேசித்த படியால் காயினுக்கு எரிச்சல் உண்டானது.

5. காயினே உன்முக நாடி ஏன் வேறுபட்டது ? Gen 4:6, ,

காயினுடைய இருதயத்திற்குள்ளே பிரவேசித்த பாவம் / சாபம் காயினுடைய ஆத்துமாவை அடிமைப்படுத்தி, காயினை ஆட்சி செய்கிறபடியால் காயினுடைய முக நாடி வேறுபட்டது.

காயின் நிலத்தின் கனிகளை, கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டு வந்தபோது காயினையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரிக்க வில்லை, ஏனென்றால் ஆதாமின் பாவத்தினால் ஏற் கனவே பூமி சபிக்கப்பட்டிருக்கிறது Gen 1:29-31,Gen 3:17-19,

சபிக்கப்பட்ட பூமியில் விளைந்த நிலத்தின் கனிகளை கர்த்தருக்கு, காயின் காணிக்கையாக கொண்டு வந்திருக்கும்போது அவைகள் நிச்சயமாக முள்ளும், குருக்கும் உள்ளவைகளாக இருந்து சபிக்கப்பட்டவைகளாகத்தான் இருக்க முடியும்.

ஆதாமின் பாவத்தினால் ஏற்கனவே சபிக்கப்பட்ட பூமியில் விளைந்த சாபங்களை / ஜென்ம கரும பாவங்களை காயின் தன்னு டைய இருதயத்தில் பலி செலுத்தி தீமைகளை

நன்மையாக ஜெயங் கொள்ளவேண்டும், ஆனால் காயினோ தேவன் ஆதாமிற்கு கொடுத்த சாபங்களையே மீண்டும் தேவனுக்கு காணிக்கையாக கொண்டு வருகிறான், இதனால் காயினையும் அவன் காணிக்கை யையும் கர்த்தர் அங்கிகரிக்க வில்லை. . Gen 3:17-18,

6. நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ?

காயினுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி அவன் முக நாடி வேறுபட்டபோது, கர்த்தர் காயினுக்கு மறுமொழியாக, நீ நன்மை செய்தால் உனக்கு மேன்மை இல்லையோ? Gen 4:7,

தேவன் நல்லது என்று குறிப்பிட்டவைகளை தேர்ந்தெடுத்து, அவைகளில் மேலும் நல்லவைகளை நீயும் உன்னுடைய விசுவாசத் தால் பரிசோதித்து, அவைகளை கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டு வந்திருந்தால் உனக்கு மேன்மை இல்லையோ! உன்னை யும், உன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரியாமல் இருப்பாரோ!

7 நீ நன்மை செய்யாதிருந்தால் :-

நீ நன்மை செய்யாதிருந்தால், ஆதாமின் பாவத்தினால் சபிக்கப்பட்ட பூமியில் விளைந்த சாபங்களை / தீமைகளை உன் இருதயத்தில் பலி செலுத்தி அவைகளை நன்மையாக மாற்ற ஒரு வாய்ப்பு காத்திருக்கிறது. Gen 4:7,

2-2 பரலோகத்திலுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமின்; தேவனுடைய ஆலயம், பலிபீடம், பிரகாரம், ஆகிய இடங்களில் உள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின் பொருளை சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்கள் அல்லது தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள்: தேவனுடைய ஆறு முத்திரை அடையாளங்களை, பரிசுத்த ஸ்தலமாகிய தேவனுடைய ஆலயத்தில் **வெளிப்படுத்துகிறார்கள்**:-

தேவனுடைய ஆறு முத்திரை அடையாளங்களை, இரண்டாம் உடன்படிக்கையின் புதிய ஏற்பாடு, தொடர்புடைய ஆவிக்குரியதாயிருக்கிற ஆசரிப்பு முறைகள் , ஆராதனை முறைகள் மூலம்; பரலோகத்திலுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமின்; தேவனுடைய ஆலயம், பலிபீடம், பிரகாரம், ஆகிய இடங்களில் உள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின் பொருளை சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்கள் அல்லது தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள்:

பரிசுத்த ஸ்தலமாகிய தேவனுடைய ஆலயத்தில் அல்லது இருதயத்தில் நிற்றுகொண்டிருக்கிற பாழாக்குகிற அருவருப்பைக்குறித்தும், நாள்தோறும்

அவர்களுடைய அக்கிரமக் கிரியைகளைக் கண்டு, கேட்டு நீதியுள்ள தங்களுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்டு, அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும், பெருமூச்சுவிட்டழுகிறவர்கள்:

கிழே குறிப்பிட்ட தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களை, ஆவியின்படி தங்ளுடைய நெற்றிகளில் / அறிவில் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

1 புறஜாதிகளின் எந்த முறைகளையும் பின்பற்றக்கூடாது.
2 பலிபீடத்தின் பிரமாணங்களை பின் பற்றி நடக்க வேண்டும்.
3 கர்த்தருடைய பஸ்கா விருத்தை புசிக்க வேண்டும்.
4 ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும்
5 மனச்சாட்சியின் பிரமாணத்திற்கு கீழ்படிய வேண்டும்
6 இயேசு கிறிஸ்துவின் சாட்சியை பின்பற்றி நடக்க வேண்டும்
7 பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தேவனுடைய வீட்டிலே நியாயத்தீர்ப்பு துவங்கினபடியால், பாதாளத்தின் வாசல்கள் திறக்கப்பட்டு; பெருஞ்சூளையின் புகையைப்போல கர்த்தருடைய சங்கார தூதனுடைய பட்டயமாகிய கொள்ளை நோய், எழுத்தின்படியும் ஆவியின்படியும், மனுஷரை சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு **வெளிப்பட்டபோது** **Rev 9:1-11;** 1Pe 4:17-18;

பூமியின் புல்லையும் பசுமையான எந்தப் பூண்டையும் எந்த மரத்தையும் சேதப்படுத்தாமல், தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரைமாத்திரம் சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. Rev 9:4

கிழே குறிப்பிட்ட நாண்கு வகையான ஜனங்கள், கர்த்தருடைய சங்கார தூதனுடைய பட்டயத்திற்கு எழுத்தின்படியும் ஆவியின்படியும், தப்புவிக்கப்படுகிறார்கள்

**1** பூமியின் புல் - பசுமையான புல்லைப்போல நற்கிரியைகளை உடையவர்கள்.
**2** பசுமையான பூண்டு - இருதயத்தின் நல்ல ஆலோசனைகளை உடையவர்கள்.
**3** பூமியின் மரம் - நல்ல கனிகளை உடையவர்கள்.
**4** ஏழு முத்திரை அடையாளங்களை, நெற்றிகளில் ஏற்றுக்கொண்டவர்கள்.

தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களை தங்ளுடைய நெற்றிகளில் / அறிவில் ஏற்றுக்கொண்டு மனந்திரும்பாமல், அவைகளுக்கு விரோதமாகவோ, இனையாகவோ, சிந்தித்து செயல்பட முயற்சி செய்கிறபோது: ஆவியின்படி அந்திக்

கிறிஸ்துவின் முத்திரை அடையாளங்களை, தங்ளுடைய நெற்றியிலும், வலது கையிலும், / அறிவிலும் கிரியைகளிலும் பெற்றுக்கொள்ளுகிறார்கள்;

இவர்கள் வலுசர்ப்பத்தின் வாயிலும், மிருகத்தின் வாயிலும், கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து; புறப்படுகிற தவளைகளுக்கு ஒப்பான மூன்று பிசாசுகளின் அசுத்த ஆவிகளுக்கு அடிமைப்பட்டு, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும், வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.Rev 16:13-15

இவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டி சபையின் மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணி, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே பங்கடைவார்கள்

3-0 இரண்டாம் ஆதாமாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, பலிபீடத்தின் ஊழியம் செய்து, அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, நாம் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டபோது; முதலாம் ஆதாமின் மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பின் சாபங்கள் நீக்கப்படுகிறது:-

ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானபோது: தேவனாகிய கர்த்தர், ஆதாமின் விலா எலும்பாகிய ஸ்திரீக்கு கொடுத்த சாபங்களும் நீக்கப்படுகிறது.

நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது. அப்படியிருந்தும், மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்.

ஆனாலும் மீறுதலின் பலன் கிருபை வரத்தின் பலனுக்கு ஒப்பானதல்ல. எப்படியெனில், ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க, தேவனுடைய கிருபையும் இயேசு கிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது. Rom 5:13-15

மேலும் ஒருவன் பாவஞ்செய்ததினால் உண்டான தீர்ப்பு தேவன் அருளும் ஈவுக்கு ஒப்பானதல்ல; அந்தத் தீர்ப்பு ஒரே குற்றத்தினிமித்தம் ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது; கிருபைவரமோ அநேக குற்றங்களை நீக்கி நீதிவிளங்கும் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது.

அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே.

ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள். Rom 5:16-19

3-1 தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கு கொடுத்த சாபங்கள்:-

1 தேவனாகிய கர்த்தர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்;

2 நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்

3 நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார். Gen 3:17-19

4 தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்.

5 தேவனாகிய கர்த்தர்: மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார். Gen 3:22-24

3-2 தேவனாகிய கர்த்தர்: ஆதாமின் விலா எலும்பாகிய ஸ்திரீக்கு கொடுத்த சாபங்கள்:-

1 தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள். தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார்.

2 தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயையும் சர்ப்பத்தையும் பார்த்து: உனக்கும் ஸ்திரீக்கும், பகை உண்டாக்குவேன்; உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்;

3 ஸ்திரீயும், ஸ்திரீயின் வித்துக்களும்; இணைந்து சர்ப்பத்தையும் சர்ப்பத்தின் வித்துக்களின் தலையை நசுக்குவார்கள், சர்ப்பமும் சர்ப்பத்தின் வித்துக்களும் இணைந்து ஸ்திரீயையும், ஸ்திரீயின் வித்துக்களின்; குதிங்காலை நசுக்குவார்கள்

4-0 ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்:-

தேவனாகிய கர்த்தர் ஆதாமின் நாசியிலே ஜீவசுவாசத்தை ஊதினபோது, ஜீவாத்துமாவானான் அதுபோல: கிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்ட நித்தியஜீவ வார்த்தைகளை தங்களுடைய ஆத்துமாவின் ஜீவசுவாசமாக ஏற்றுக்கொள்ளுகிறவர்கள்; அவனவன் தன் தன் வரிசையிலே நித்திய ஜீவனில் உயிர்ப்பிக்கப்பட்டு ஜீவாத்துமாவாக பிழைக்கிறார்கள்.

4-1 பிதாவினால் கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுகிறபோது: முதற்பலனாகிய கிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்ட நித்தியஜீவ வார்த்தைகளை

தங்களுடைய ஆத்துமாவின் ஜீவசுவாசமாக ஏற்றுக்கொள்ளுகிறவர்கள்; கிறிஸ்துவின் சரீர அவயவங்களாகிய மணவாட்டி சபையாக அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவார்கள்:-

பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான். என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். Joh 5:21-24

மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார். அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். Joh 5:25-27

நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். Joh 17:6 -7

நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர்

எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே. Joh 17:8-9

என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன். நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும். Joh 17:10-11

நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை. Joh 17:12

4-2 கிறிஸ்துவின் சரீர அவயவங்களாகிய மணவாட்டி சபை: முதற்பலனாகிய கிறிஸ்துவின் உடன்படிக்கையில் நிலைத்திருந்து; நித்தியஜீவ வார்த்தைகளை கர்ப்பத்தரித்து, அவைகளை ஜீவசுவாசமாக வெளிப்படுத்துகிறபோது தேவபக்தியுள்ள சந்ததியைப் பெற்றெடுக்கிறார்கள்:-

அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருமே; இதோ, அவர்கள் எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று; எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று; நாங்கள் அறுப்புண்டுபோகிறோம் என்கிறார்கள்.

ஆகையால் நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், இதோ, என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரவும் பண்ணுவேன். Eze 37:11-12

என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப்பண்ணும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள். என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்;

நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்; இதைச் சொன்னேன், இதைச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார். Eze 37:13-14

பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். Joh 5:28-29

நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். Joh 17:14-15

நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன். Joh 17:16-19

நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். Joh 17:20-21

4-3 முதற்பலனாகிய கிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்ட நித்தியஜீவ வார்த்தைகளை தங்களுடைய ஆத்துமாவின் ஜீவசுவாசமாக ஏற்றுக்கொள்ளாதவர்கள்; பூமிக்குரிய நயவஞ்சகமான ஆசீர்வாதங்களினால் வஞ்சிக்கப்பட்டு, நன்மை தீமைகளை வெளிப்படுத்துகிற பாவிகளின் பிரமாணமாகிய நியாயப்பிரமாண நீதியினால் அந்திக் கிறிஸ்துவின் மணவாட்டி சபையாக அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவார்கள்:-

ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு துணையாக கொடுக்கப்பட்ட ஸ்திரியாகிய சபையானது பூமிக்குரிய நயவஞ்சகமான ஆசீர்வாதங்களினால் வஞ்சிக்கப்பட்டு, நன்மை தீமைகளை வெளிப்படுத்துகிற பாவிகளின் பிரமாணமாகிய நியாயப்பிரமாண நீதியின் கிரியைகளை புசித்து ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கும் அவைகளையே பின்பற்றும்படி ஸ்திரியாகிய

சபை கொடுக்கிறது, இதனால் சபையும், ஜெயங்கொள்ளுகிறவர்களும் தேவனுடைய ரூபத்தையும் சாயலையும் இழந்து போனார்கள்.

முதற்பலனாகிய கிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்ட நித்தியஜீவ வார்த்தைகளை தங்களுடைய ஆத்துமாவின் ஜீவசுவாசமாக ஏற்றுக்கொள்ளாமல் தொடர்ந்து மரணத்திலே நிலைத்திருக்கிறபடியால் ; தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கு கொடுத்த சாபங்கள் இவர்களை பின்தொடர்கிறது

தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கு கொடுத்த சாபங்கள்:-

1 தேவனாகிய கர்த்தர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்;

2 நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்

3 நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார். Gen 3:17-19

4 தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்.

5 தேவனாகிய கர்த்தர்: மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார். Gen 3:22-24

4-4 பூமிக்குரிய நயவஞ்சகமான ஆசீர்வாதங்களினால் சபையானது வஞ்சிக்கப்பட்டு, நன்மை தீமைகளை வெளிப்படுத்துகிற பாவிகளின் பிரமாணமாகிய நியாயப்பிரமாண நீதியினால் தேவ பத்தியில்லாத விபஞ்சார சந்ததியை சபை பெற்றெடுக்கிறபடியால் தேவனாகிய கர்த்தர்: ஆதாமின் விலா எலும்பாகிய ஸ்திரீக்கு கொடுத்த சாபங்கள் இவர்களை பின்தொடர்கிறது:-

ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் தேவனுடைய ரூபமும் சாயலுமான நித்திய மகிமையை தரித்துக் கொண்டிருக்கும்போது, தேவனுடைய கட்டளையின்படி நன்மை தீமை இன்னதென்று பகுத்தறிகிற அறிவை தங்களுடைய ஆவிக்குரிய ஆகாரமாக புசிக்காமல்; தேவனுடைய நீதியின் பிரமாணங்களையும், நித்திய ஜீவ வார்த்தைகளையும் ஆவிக்குரிய ஆகாரமாக புசிக்கும்போது, அவர்கள் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள் Gen_3:11, Gen_2:15-17, Gen_2:21-25, 2Co_5:1-3,

ஆதாமும் ஏவாளும் எப்பொழுது தேவனுடைய கட்டளையை மீறி, நன்மை தீமை இன்னதென்று பகுத்தறிகிற அறிவை தங்களுடைய ஆவிக்குரிய ஆகாரமாக புசிக்கிறார்களோ அப்பொழுது தேவனுடைய ரூபமும் சாயலுமான நித்திய மகிமை, அவர்களை விட்டு விலகுகிறபடியால், அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு, அவர்களுடைய புத்தி தெளிகிறபடியால் தங்களுடைய நிர்வாணம் தங்களுக்கு வெளிப்பட்டு / உணர்த்தப்பட்டு வெட்கம் அடைகிறார்கள். Gen_3:5-7, 2Co_5:1-8, 1Jo_3:20,

இஸ்ரவேல் ஜனங்கள் கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாமல் நன்மை தீமைகளை வெளிப்படுத்துகிற மனசாட்சியின் பிரமாணமாகிய நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நீதிப்பிரமாணத்தை தேடின படியால், சீயோனிலிருக்கிற மூலைக்கல்லில் இடறி விழுந்தார்கள் அது போல;

நன்மை தீமைகளை பகுத்தறிகிற அறிவினால் வெளிப்படுகிற கிரியைகளின் மூலம், ஆதாமும் ஏவாளும் தேவனுடைய ரூபமும் சாயலுமான நித்திய மகிமையிலும் நித்திய ஜீவனிலும் பிழைக்க வகை தேடினபோது, ஏதேன் தோட்டத்தில் தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையில் மரித்து இடறி விழுந்தார்கள். Rom_9:30-33, Rom_3:20-21, Rom_7:7-11, Rom_2:14-15, Rom_2:27, Eze_20:23-25, Eze_33:12-16,

நன்மை தீமை இன்னதென்று பகுத்தறிகிற அறிவை ஆவிக்குரிய ஆகாரமாக புசித்து, தங்கள் கண்கள் திறக்கப்பட்டதினால் தங்களுடைய நிர்வாணமாகிய பாவங்களை உணர்ந்து கொண்டவர்களுக்கு தேவனுடைய சத்தத்தை கேட்க முடிகிறது.

அல்லது தேவனுடைய நீதியின் பிரமாணங்களையும், நித்திய ஜீவ வார்த்தைகளையும் உணர்ந்து கொண்டவர்களுக்கு தன்னுடைய / மற்றவர்களுடைய நிர்வாணமாகிய பாவங்களை உணர்ந்து கொள்ள முடிகிறது. Gen_3:6-8,Exo_16:8, Exo_32:21-27, , Hos_2:8-10, Rev_3:17-19, Rev_16:15,

ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு துணையாக கொடுக்கப்பட்ட சபையானது, தேவனுடைய நீதியின் பிரமாணங்களையும், நித்திய ஜீவ வார்த்தைகளையும் ஆவிக்குரிய ஆகாரமாக கொடுத்து, ஜெயங்கொள்ளுகிறவர்களை உருவாக்காமல் / தேவ பத்தியுள்ள சந்ததியை பிரசவிக்காமல், பூமிக்குரிய நயவஞ்சகமான ஆசீர்வாதங்களினால் சபையானது வஞ்சிக்கப்பட்டு, நன்மை தீமைகளை வெளிப்படுத்துகிற பாவிகளின் பிரமாணமாகிய நியாயப்பிரமாண நீதியினால் தேவ பத்தியில்லாத விபஞ்சார சந்ததியை சபை பெற்றெடுக்கிறது.

ஸ்திரியாகிய சபை இந்த காரியத்தை செய்தபடியால் தேவன் ஸ்திரியாகிய சபைக்கு கொடுத்த சாபத்தினால், இப்பொழுதும் ஆவிக்குரிய நிலையில் ஆத்துமாக்களை பெற்றெடுக்கும் போது மிகவும் வேதனையோடு சபை பெற்றெடுக்கிறது. 2Co_11:2-4, 1Ti_2:11-15, 1Ti_1:5-11, Job_14:1-2, Job_15:14, Job_25:4-6, Rom_2:17-24, Gal_4:21-25, Gal_4:26-31, Pro_30:23,

தேவனாகிய கர்த்தர்: ஆதாமின் விலா எலும்பாகிய ஸ்திரீக்கு கொடுத்த சாபங்கள்:-

1 தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள். தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார்.

5-0 சீயோன் மலையில் உள்ள ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமின் தேவனுடைய ஆலயத்திலும், பலிபீடத்திலும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்:-

சீயோன் மலையில் உள்ள ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமின்; தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும், அதில் தொழுதுகொள்ளுகிறவர்களையும்; பரிசுத்தவான்களுடைய நீதியின் கிரியைகளின்

மூலம் எண்ணிப்பார்கிறபோது: பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையும்,

பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளும், தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை 1,44,000; வரிசைகளில் வருகிறவர்கள் நிறைவாகும்போது புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் மூலம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக,பெற்றுக்கொள்ளுகிறார்கள் Rev 11:1-2; Heb 12:23

5-1 நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய், நமக்காக தமது மாம்சமாகிய திரையின் வழியாக; மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு, புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்; அழைக்கப்பட்டவர்கள் தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமில் ; வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரலோகத்திலுள்ளவைகளுக்கு, வரப்போகிற நன்மைகளின் பொருளை சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார்.

நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்.

அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார். Heb 6:17-20

5-2 புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கிறவர்கள்: தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நிலையானதும்; உறுதியானதுமான நித்திய ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள்:-

நமக்கு இரண்டாம் கூடாரமாகிய மகா பரிசுத்த ஸ்தலத்தில் அல்லது ஆவி,ஆத்துமாவில், ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளைப் புசிக்கிறதற்குக் முதலாம் கூடாரமாகிய சரீரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை. Heb 13:9-10

முதலாங்கூடாரம் நிற்குமளவும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார். அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக் கூடாதவைகளாயிருக்கிறது. Heb 9:8-9

முதலாம் கூடாரமாகிய பாவ சரீர அவயவங்களை, பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, இரண்டாம் திரையாகிய பாவ மாம்சத்திலே, பாவத்தின் இச்சைகளை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்போது; தங்களுடைய மனச்சாட்சியில் அல்லது ஆவி,ஆத்துமாவில் மரணத்தை உருவாக்கும் செத்தக் கிரியைகள் சுத்திகரிக்கப்படுவதால், Heb 9:11-17 ;

இரண்டாம் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ் வரைக்கும் இரண்டாகக் கிழிக்கப்பட்டு, இரண்டாம் கூடாரமாகிய மகா பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற மார்க்கம் பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தபடுகிறது. Rom 8:1-3 Rom 12:1-3

இரண்டாம் உடன்படிக்கையின் புதிய ஏற்பாடு, தொடர்புடைய ஆவிக்குரியதாயிருக்கிற ஆசரிப்பு முறைகள் , ஆராதனை முறைகள் மூலம்; பரலோகத்திலுள்ளவைகளுக்கு, வரப்போகிற நன்மைகளின் பொருளை சுதந்தரித்துக்கொள்ளுவதற்காக; முதலாம் கூடாரமாகிய பாவ சரீர அவயவங்களை, பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறவர்கள்: Heb 9:22-26

இரண்டாம் கூடாரமாகிய ஆவி,ஆத்துமாவில், பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொண்டு, புத்தியுள்ள ஆராதனை செய்து: இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, தங்களுடைய மனம் புதிதாகிறதினாலே; ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே ஆவி,ஆத்துமாவில், மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபமடைகிறார்கள்.

மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிற பொன்னாற்செய்த தூபகலசம், முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டி; அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம், ஆரோனுடைய தளிர்த்த கோல், உடன்படிக்கையின் கற்பலகைகள்; ஆகிய இவைகளின் தொடர்புடைய ஆவிக்குரிய பொருளுக்கேற்றபடி: (2Co 3:6-18; Heb 9:3-5)

ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு பரிசுத்த ஆவியானவரால் தமது சித்தத்தின்படியே, தேவன் அவனவனுக்குப் பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப்பிரமாணத்தின்படியே, தங்களுடைய இருதய பலிபீடத்திற்குரியவைகளைப் புசித்து, ஒரே சரீரமாகிய கிறிஸ்துவின் அநேக அவயவங்கள் அல்லது 1,44,000, வரிசையில் வருகிறவர்கள்; நீதியைக் கொடுக்கும் ஊழியர் அழைப்பை சுதந்தரித்துக்கொண்டு,

இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, தங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமடைந்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார்கள்; இவர்கள் சீயோன் மலையில் உள்ள ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமின்; தேவனுடைய ஆலயத்திற்கும் , பலிபீடத்திற்கும் வந்தடையகிறபோது புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் மூலம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை பெற்றுக்கொள்ளுகிறார்கள் Rev 11:1-2; Heb 12:23

6-0 தேவனுடைய பரிசுத்த ஸ்தலம், மற்றும் மகா பரிசுத்த ஸ்தலம் அல்லது பலிபீடத்தின் ஊழியத்தை நிறைவேற்றுகிற ஆவிக்குரிய யூதர்களுக்கு விசேஷமாக உபத்திரவ காலத்தில் பல நன்மைகளை செய்து, ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரத்திலிருந்து, தேவனை மகிமை படுத்துகிற புறஜாதிகளின் ஆசீர்வாதங்கள்:-

தேவனுடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற புறஜாதிகள், தேவனுடைய பரிசுத்த ஸ்தலம், மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியத்தை நிறைவேற்றுகிற ஆவிக்குரிய யூதர்களுக்கு, அல்லது கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அவயவங்களாகிய 1,44,000, வரிசையில் வருகிற ஊழியர் ஒருவனுக்கு: விசேஷமாக உபத்திரவ காலத்தில் கீழே குறிப்பிட்ட நன்மைகளில் நீங்கள் எதைச்

செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.

1 தீர்க்கதரிசி / நீதிமான் / சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான். Mat 10:40

2 பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்;
3 தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்;
4 அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்;
5 வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்;
6 வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்;
7 காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்.

6-1 தேவனுடைய பரிசுத்த ஸ்தலம், மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியத்தை நிறைவேற்றுகிற ஆவிக்குரிய யூதர்களுக்கு விசேஷமாக உபத்திரவ காலத்தில் பல நன்மைகளை செய்து, மரணத்தை சந்திக்காமல் இருக்கிறவர்களுடைய ஆசீர்வாதங்கள்:-

தேவனுடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற புறஜாதிகள்: முதலாம் கூடாரமாகிய பரிசுத்த ஸ்தலம், மற்றும் இரண்டாம் கூடாரமாகிய மகா பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியத்தை நிறைவேற்றுகிற மிகவும் சிறியவராகிய ஊழியர் ஒருவனுக்கு:

விசேஷமாக உபத்திரவ காலத்தில் பல நன்மைகளை செய்து, மரணத்தை சந்திக்காமல் இருக்கிறவர்களை: ராஜா தமது வலது பக்கத்தில் பிரித்தெடுத்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற தேவனுடைய இராஜ்யமாகிய ஆயிரம் ஆண்டு இராஜ்யத்தைச் நேரடியாக சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்பார். Mat 25:31-46

6-2 தேவனுடைய பரிசுத்த ஸ்தலம், மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியத்தை நிறைவேற்றுகிற ஆவிக்குரிய யூதர்களுக்கு, விசேஷமாக உபத்திரவ காலத்தில் பல நன்மைகளை செய்து, மரணத்தை சந்தித்து இரத்தசாட்சியாக மரிக்கிறவர்களுடைய ஆசீர்வாதங்கள்:-

தேவனுடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற புறஜாதிகள், பரிசுத்த ஸ்தலம், மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியத்தை நிறைவேற்றுகிற மிகவும் சிறியவராகிய ஊழியர் ஒருவனுக்கு; விசேஷமாக உபத்திரவ காலத்தில் பல நன்மைகளை செய்து, மரணத்தை சந்தித்து இரத்தசாட்சியாக மரிக்கிறவர்கள், நேரடியாக தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக வந்தடைகிறார்கள். Rev 7:9-17

நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்.

7-0-0 கிறிஸ்துவின் மணவாட்டி சபையும், அவர்கள் பெற்றெடுத்த தேவபக்தியுள்ள சந்ததிகளும் இணைந்து தேவனுடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதற்காக, தேவனுடைய இராஜ்யத்தின் சிங்காசனங்களை பூமியில் ஸ்தாபிக்க போராடுகிறபோது; தேவனாகிய கர்த்தர்: ஆதாமின் மனைவியாகிய ஸ்திரீக்கு, கொடுத்த சாபங்கள் நிறைவேறி முடிவடைகிறது:-

7-1-0 கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை, ஜீவ சுவாசமாக தங்களுடைய ஆவி ,ஆத்துமா, சரீரத்தில் பூரணமாக ஏற்றுக்கொண்டு ஜீவனுள்ள ஆத்துமாவாக பிளைத்துக்கொண்டிருக்கிறவர்கள்: தேவனுக்கும் மனிதனுக்கும் மந்தியில் அடையாளமாக கொடுக்கப்பட்ட தேவனுடைய ஏழு முத்திரைகளின் அடையாளங்களையும் ஏற்றுக்கொள்ளுகிறபோது, கிறிஸ்துவின் மணவாட்டி சபையாக வெளிப்படுகிறார்கள்

7-1-1 இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை ஜீவ சுவாசமாக தங்களுடைய ஆத்துமாவின் அறிவில் பூரணமாக ஏற்றுக்கொள்ளுகிறவர்கள்; முதலாம் ஆதாம் இழந்து போன தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையை,

சுதந்தரித்துக்கொள்ளுகிறதற்கு தங்களுடைய ஆவிக்குரிய கண்களின் தரிசனங்கள் வெளிப்படுகிறது

7-1-2 இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை ஜீவ சுவாசமாக தங்களுடைய இருதயத்தின் ஆவியில், பூரணமாக ஏற்றுக்கொள்ளுகிறவர்கள்; முதலாம் ஆதாம் இழந்து போன தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையை, சுதந்தரித்துக்கொள்ளுகிறதற்கு தங்களுடைய இருதயத்தின் ஆவியில், தரிசனங்கள் வெளிப்படுகிறது

7-1-3 இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை ஜீவ சுவாசமாக தங்களுடைய சரீரத்தின் அவயவங்களில், பூரணமாக ஏற்றுக்கொள்ளுகிறவர்கள்; முதலாம் ஆதாம் இழந்து போன தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையை, சுதந்தரித்துக்கொள்ளுகிறதற்கு தங்களுடைய சரீரத்தின் அவயவங்களில், கிரியைகள் வெளிப்படுகிறது

7-1-4 கிறிஸ்துவினுடைய இரத்தத்தினால் தங்கள் மனச்சாட்சியைச் செத்தக் கிரியைகளறச் சுத்திகரிக்கிறவர்கள்: ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்காக, ஆத்துமா, ஆவி, சரீரம் , ஆகிய இவைகளில் ஜீவ சுவாசமாகிய நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின் பொருளுக்கு முழுவதுமாக மாறுவதற்காக, அறிவு, புத்தி, ஞானம், ஆகிய இவைகளை சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள்

7-2-0 தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களின் மூலம் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலன்களாக பிறந்த கிறிஸ்துவின் மணவாட்டி சபை, தேவன் பகிர்ந்த விசுவாச அளவுப்பிரமாணங்களை கர்ப்பந்தரித்து, சத்திய ஆவி, கிறிஸ்துவின் ஆவி, பரிசுத்த ஆவி, ஆகியவைகளுடனும், இணைந்து தேவபக்தியுள்ள சந்ததியைப் பெற்றெடுக்கிறார்கள்:-

7-2-1 தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களின் மூலம் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலன்களாக பிறந்த கிறிஸ்துவின் மணவாட்டி சபை, தேவனுடைய இரட்சிப்பின் உடன்படிக்கையின் மூலம் சத்திய ஆவி, கிறிஸ்துவின் ஆவி, பரிசுத்த ஆவி, ஆகியவைகளுடனும், இணைந்து தேவன் தங்களுக்கு பகிர்ந்த விசுவாச அளவுப்பிரமாணங்களை பெற்றுக்கொள்ளுகிறார்கள்

7-2-2 கிறிஸ்துவின் மணவாட்டி சபை, தேவனுடைய இரட்சிப்பின் உடன்படிக்கையில் நிலைத்திருந்து தேவன் பகிர்ந்த விசுவாச அளவுப்பிரமாணங்களின் மூலம் ஜீவ சுவாசமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ சத்திய வார்த்தைகளை கர்ப்பந்தரித்து, சத்திய ஆவி, கிறிஸ்துவின் ஆவி, பரிசுத்த ஆவி, ஆகியவைகளுடனும், இணைந்து ஆத்துமாக்களை பெற்றெடுக்க பிரசவவேதனை படுகிறபோது தேவபக்தியுள்ள சந்ததியைப் பெற்றெடுக்கிறார்கள்

7-3-0 கிறிஸ்துவின் மணவாட்டி சபையும், அவர்கள் பெற்றெடுத்த தேவபக்தியுள்ள சந்ததிகளும், சத்திய ஆவி, கிறிஸ்துவின் ஆவி, பரிசுத்த ஆவி, ஆகியவைகளுடனும், இணைந்து தேவனுடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதற்காக, தேவனுடைய இராஜ்யத்தின் சிங்காசனங்களை பூமியில் ஸ்தாபிக்க போராடுகிறார்கள்

தேவனுடைய மூன்று தூதருடைய எக்காளசத்தங்களினால் மகா சத்தமிட்டு: பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, ஆபத்துவரும் என்று எச்சரிப்பின் சத்தத்தோடு, தேவனுடைய கோபகலசங்களை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினார்கள்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின:-

7-3-1 தேவனுடைய முதலாவது தூதனுடைய எக்காளசத்தங்களினால் மகா சத்தமிட்டு: பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, ஆபத்துவரும் என்று எச்சரிப்பின் சத்தத்தோடு, தேவனுடைய கோபகலசங்களை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்; அப்பொழுது பாதாளக்குழியின் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்து மனுஷர்களை சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது.

7-3-2 தேவனுடைய இரண்டாவது தூதனுடைய எக்காளசத்தங்களினால் மகா சத்தமிட்டு: பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, ஆபத்துவரும் என்று எச்சரிப்பின் சத்தத்தோடு, தேவனுடைய கோபகலசங்களை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்;

அப்பொழுது தேவனுக்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து ஒரு சத்தந்தோன்றி, ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே

கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களை மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு அவிழ்த்துவிடு என்று சொல்லக்கேட்டேன்

7-3-3 தேவனுடைய முன்றாவது தூதனுடைய எக்காளசத்தங்களினால் மகா சத்தமிட்டு: பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, ஆபத்துவரும் என்று எச்சரிப்பின் சத்தத்தோடு, தேவனுடைய கோபகலசங்களை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின

7-4-0 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

7-4-1 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்கள் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் அறிவைப் பெற்று தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவார்கள் Rev_14:1-5, Rev_19:9,

7-4-2 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

கிறிஸ்துவுடன் இருப்பவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பவட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாக இருப்பார்கள்

இவர்கள் பரிசுத்த ஆவி, அபிசேஷக ஆவி, சத்திய ஆவி, ஆகியவைகளின் கிரியைகளினால் ஒருங்கிணைக்கப்படுவார்கள்.

7-4-3 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

ஒரு ஸ்திரீ சகல ஜாதிகளையும் இரும்புக்கோலால் ஆளுகை செய்யும் ஆண்பிள்ளையை பெறும்படி பிரசவ வேதனையடைந்து வருத்தப்பட்டு அலறுகிறாள். Rev_12:1-5,

7-4-4 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில்பெயர்எழுதப்பட்டவர்கள் மிருகத்தின்அடையாளத்தையும் அசுத்த ஆவிகளின் அற்புதங்களையும் தங்கள் அறிவிலும் கிரியைகளிலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் Rev_13:8, Rev_17:8,

7-4-5 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

தேவன் பரிசுத்தவான்களுக்கு1260 நாள் அளவும் தீர்க்கதரிசனம் சொல்லும்படி அதிகாரங்களைக் கொடுத்தார். பரிசுத்தவான்கள் தேவ வசனத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் சாத்தானை ஜெயித்தார்கள். Rev_11:3, Rev_12:11

7-4-6 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

பரிசுத்தவான்கள் தங்களுடைய ஊழியத்தில் ஆவிக்குரிய பட்டயமாகிய தேவ வசனத்தைக்கொண்டு கடிந்து கொண்டு உபதேசம் பண்ணும்போது அதை எதிர்ப்பவர்கள் எழுத்தின் படியுள்ள பட்டயத்தைக்கொண்டு வெட்டுவார்கள் ஆனாலும் சமாதானத்தின் சுவிசேஷத்தை உடையவனாயிருந்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்கள் எலியாவைப்போல பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் Rev_13:9-10, Rev_14:12-13,

7-4-7 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

அந்திக் கிறிஸ்துவின் முத்திரைஅடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக் கொள்ளாதவர்கள் மூன்று அசுத்த ஆவிகளையும் ஜெயங்கொண்டு

தேவனுடைய முத்திரை அடை யாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் முதலாம் உயிர்தெழுதலில் பங்கடைவார்கள். Rev_20:4-6

7-4-8 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைந்து அக்கினி கலந்த கண்ணாடிக் கடலில் ஞானஸ்தானம், பெற்று மகிமையடைவார்கள். . Rev_15:2-3, Rev_4:6,

8-0-0 சாத்தான் குடிகொண்டிருக்கிற சிங்காசனங்களை, பூமியில் ஸ்தாபிக்கப்பட்ட நிலையிலே தொடர்ந்து நிலைத்திறுத்துவதற்காக: அந்திக்கிறிஸ்துவின் மணவாட்டி சபையும், அவர்கள் பெற்றெடுத்த தேவபக்தி இல்லாத விபச்சார சந்ததிகளும்; போராடுகிறபோது, தேவனாகிய கர்த்தர்: ஸ்திரீயை வஞ்சித்த சர்ப்பமாகிய சாத்தானுக்கும், கொடுத்த சாபங்கள் நிறைவேறி முடிவடைகிறது:-

8-1-0 தேவனுக்கும் மனிதனுக்கும் மந்தியில் அடையாளமாக கொடுக்கப்பட்ட தேவனுடைய ஏழு முத்திரைகளின் அடையாளங்களின் மூலம் கிறிஸ்துவின் மணவாட்டி சபையாக வெளிப்பட்டவர்கள்; தேவனுடைய உடன்படிக்கையில் இடறிவிழுகிறபோது, அந்திக்கிறிஸ்துவின் மணவாட்டி சபை வெளிப்படுகிறார்கள்:-

8-1-1 இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை ஜீவ சுவாசமாக தங்களுடைய ஆத்துமாவின் அறிவில் பூரணமாக ஏற்றுக்கொள்ளாதவர்கள்; முதலாம் ஆதாம் இழந்து போன தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையை, சுதந்தரித்துக்கொள்ளாமல், தங்களுடைய ஆவிக்குரிய கண்களின் தரிசனங்களில் இடறிவிழுகி றார்கள்

8-1-2 இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை ஜீவ சுவாசமாக தங்களுடைய இருதயத்தின் ஆவியில், பூரணமாக ஏற்றுக்கொள்ளாதவர்கள்; முதலாம்

ஆதாம் இழந்து போன தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையை, சுதந்தரித்துக்கொள்ளாமல், தங்களுடைய இருதயத்தினுடைய ஆவியின், தரிசனங்களில் இடறிவிழுகிறார்கள்

81-3 இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை ஜீவ சுவாசமாக தங்களுடைய சரீரத்தின் அவயவங்களில், பூரணமாக ஏற்றுக்கொள்ளாதவர்கள் ; முதலாம் ஆதாம் இழந்து போன தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையை, சுதந்தரித்துக்கொள்ளாமல் தங்களுடைய சரீரத்தின் அவயவங்களுடைய , கிரியைகளில் இடறிவிழுகிறார்கள்

8-1-4 கிறிஸ்துவினுடைய இரத்தத்தினால் தங்கள் மனச்சாட்சியைச் செத்தக் கிரியைகளறச் சுத்திகரிக்காதவர்கள்: ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்காக, ஆத்துமா, ஆவி, சரீரம் , ஆகிய இவைகளில் ஜீவ சுவாசமாகிய நித்திய ஜீவ வார்த்தைகள் இல்லாதபடியால் பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின் பொருளுக்கு முழுவதுமாக மாறமுடியாமல், அறிவு, புத்தி, ஞானம், ஆகிய இவைகளில் இடறிவிழுந்து மாயைகளை சுதந்தரித்துக்கொள்ள்ளுகிறார்கள்

8-2-0 அந்திக்கிறிஸ்துவின் முத்திரை அடையாளங்களின் மூலம் சாத்தானுக்கும் அந்திக்கிறிஸ்துவிற்கும் முதற்பலன்களாக பிறந்த அந்திக்கிறிஸ்துவின் மணவாட்டி சபை, பரஸ்திரீயாகிய சபையின் உபதேசங்களை கர்ப்பந்தரித்து, தவளைகளுக்கு ஒப்பான அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் மூன்று அசுத்த ஆவிகளுடனும், இணைந்து தேவபக்தி இல்லாத விபச்சார சந்ததியைப் பெற்றெடுக்கிறார்கள்:-

8-2-1 அந்திக்கிறிஸ்துவின் முத்திரை அடையாளங்களின் மூலம் சாத்தானுக்கும் அந்திக்கிறிஸ்துவிற்கும் முதற்பலன்களாக பிறந்த அந்திக்கிறிஸ்துவின் மணவாட்டி சபை, பரஸ்திரீயாகிய சபையின் உடன்படிக்கையின் மூலம் தங்களுக்கு பகிர்ந்த உபதேசங்களின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக்கொள்ளுகிறார்கள்

8-2-2 அந்திக்கிறிஸ்துவின் மணவாட்டி சபை, பரஸ்திரீயாகிய சபையின் உடன்படிக்கையில் நிலைத்திருந்து, தங்களுக்கு பகிர்ந்த உபதேசங்களின் அளவுப்பிரமாணங்களின் மூலம் உபதேசங்களை கர்ப்பந்தரித்து, தவளைகளுக்கு

ஒப்பான அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் மூன்று அசுத்த ஆவிகளுடனும், இணைந்து ஆத்துமாக்களை பெற்றெடுக்க பிரசவவேதனை படுகிறபோது, தேவபக்தி இல்லாத விபச்சார சந்ததியைப் பெற்றெடுக்கிறார்கள்

8-3-0 அந்திக்கிறிஸ்துவின் மணவாட்டி சபையும், அவர்கள் பெற்றெடுத்த தேவபக்தி இல்லாத விபச்சார சந்ததிகளும்; தவளைகளுக்கு ஒப்பான அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் மூன்று அசுத்த ஆவிகளுடனும், இணைந்து; சாத்தான் குடிகொண்டிருக்கிற சிங்காசனங்களை, பூமியில் ஸ்தாபிக்கப்பட்ட நிலையிலே தொடர்ந்து நிலைத்திறுத்துவதற்காக போராடுகிறார்கள்

8-3-1 நான் பார்த்தபோது, இதோ, பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது; அந்த ஆலயத்திலிருந்து ஏழு வாதைகளையுடைய அவ்வேழு தூதர்களும் சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து, மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள். Rev 15:5-6

8-3-2 தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும் உண்டான புகையினாலே தேவாலயம் நிறைந்தது; ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும் முடியும்வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது. அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் அந்த ஏழு தூதருடனே: நீங்கள் போய்த் தேவனுடைய கோபகலசங்களைப் பூமியின்மேல் ஊற்றுங்கள் என்று சொல்லக்கேட்டேன். Rev 15:8 Rev 16:1 ;

8-3-3 ஒரு தூதன் சூரியனில் நிற்கக்கண்டேன்; அவன் வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளையும் பார்த்து: நீங்கள் ராஜாக்களின் மாம்சத்தையும், சேனைத்தலைவர்களின் மாம்சத்தையும், பலவான்களின் மாம்சத்தையும், குதிரைகளின் மாம்சத்தையும், அவைகளின்மேல் ஏறியிருக்கிறவர்களின் மாம்சத்தையும்,

சுயாதீனர் அடிமைகள், சிறியோர் பெரியோர், இவர்களெல்லாருடைய மாம்சத்தையும் பட்சிக்கும்படிக்கு, மகா தேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடிவாருங்கள் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான். மற்றவர்கள் குதிரையின்மேல் ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள்; அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன. Rev 19:17-18 Rev 19:21 ;

8-3-4 மிருகமும் பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரோடும் அவருடைய சேனையோடும்

யுத்தம்பண்ணும்படிக்குக் கூடிவரக்கண்டேன். அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள். Rev 19:19-20

8-3-5 ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின்மேல் ஊற்றினான்; அப்பொழுது அதின் ராஜ்யம் இருளடைந்தது; அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக்கொண்டு, தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும், பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை.

ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின்மேல் ஊற்றினான்; அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்துவரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று. Rev 16:10-12

8-3-6 ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கி வரக்கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான். அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும். Rev 20:1-3

8-3-7 அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான்;

8-3-8 அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும்.அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது.

மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே

தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள். Rev 20:7-10.

8-4-0 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

8-4-1 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்கள்; மூன்று அசுத்த ஆவிகளினால் வஞ்சிக்கப்பட்டு தேவனுக்கும் தேவனுடைய கற்பனைகளை பின்பற்றுகிறவர்களுக்கும், விரோதமாகவும் இணையாகவும், விசுவாசத்திலும் கிரியைகளிலும் செயல்படுவார்கள். Rev_19:20,

8-4-2 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

மூன்று அசுத்த ஆவிகளின் அற்புதங்களினால் கள்ளத்தீர்க்கதரிசி, அந்திக்கிறிஸ்து, சாத்தான் , ஆகிய இவர்களை பின் தொடர்கிறவர்கள் ஒருங்கிணைக்கப்படுவார்கள் Rev_16:13-15,

8-4-3 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன்; அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். Rev_17:6, Rev_18:4, Rev_18:24,

;

8-4-4 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்படாதவர்கள் மிருகத்தை வணங்கி அசுத்த ஆவிகளின்

அற்புதங்களை தங்கள் அறிவிலும் கிரியைகளிலும் ஏற்றுக்கொள்ளுவார்கள் Rev_13:8, Rev_17:8,

8-4-5 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

கீழே விழத்தள்ளப்பட்ட சாத்தான் மிருகத்தின் முத்திரையை பெற்றவர்களுக்கு 42 மாதமளவும் பரிசுத்தவான்களோடு யுத்தம் செய்து ஜெயங்கொள்ளும்படி அதிகாரம் கொடுத்தது Rev_13:1,

8-4-6 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

ஒருவன் பரிசுத்தவான்களுக்கு தீமை செய்யத் திட்டமிடுகிறபோது, அது போலவே தேவன் அவனுக்கு தீமையை திட்டமிட்டுச் செய்வார். ஒருவன் தீமை செய்கிறதிலிருந்து விலகி நன்மை செய்கிறபோது, தேவன் அவன் மேல் வைத்த நியாயத்தீர்ப்பை அவனை விட்டு விலக்குவார்; Rev_11:5,

8-4-7 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

அந்திக் கிறிஸ்துவின் விசுவாசத்தையும்கிரியைகளையும் தங்கள் அறிவிலும் கிரியைகளிலும் ஏற்றுக்கொண்டவர்கள் தேவனுடைய கோபாக்கினையில் பங்கடைவார்கள் Rev_16:1-2, Rev_14:9-11,

8-4-8 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

மூன்று அசுத்த ஆவிகளின் அற்புதங்களினால் கள்ளத்தீர்க்கதரிசி, அந்திக்கிறிஸ்து, சாத்தான், ஆகிய இவர்களை பின் தொடர்கிறவர்கள் அக்கினி நரகத்தில் தள்ளப்படுவார்கள். Rev_19:20, Rev_20:10,

தேவனாகிய கர்த்தர்: ஆதாமின் விலா எலும்பாகிய ஸ்திரீக்கும் சர்ப்பத்திற்கும் கொடுத்த சாபங்கள்:-

1 தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள். தேவனாகிய

கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார்.

2 தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு
மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன்
வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்; Gen 3:13 -16

3 தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயையும் சர்ப்பத்தையும் பார்த்து: உனக்கும் ஸ்திரீக்கும்,
பகை உண்டாக்குவேன்; உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்;

4 ஸ்திரீயும், ஸ்திரீயின் வித்துக்களும்; இணைந்து சர்ப்பத்தையும் சர்ப்பத்தின்
வித்துக்களின் தலையை நசுக்குவார்கள், சர்ப்பமும் சர்ப்பத்தின் வித்துக்களும்
இணைந்து ஸ்திரீயையும், ஸ்திரீயின் வித்துக்களின்; குதிங்காலை நசுக்குவார்கள்

# The Scripture Feast Ministries (Regd)

## Rev Paul Benjamin, Founder and Author

TSFM

For the Predestinate Conquering

@ One among the The Bride in 1000 generation years kingdom

**REGD OFFICE:**
**NO:104, EXTN 7, MAHA LAKSHMI NAGAR, NANDIVARAM,**
**GUDUVANCHERY, KANCHIPURAM DIST CHENNAI 603 202 .**
**TAMIL NADU, SOUTH INDIA**

# தேவன் மனிதனுக்கு கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தில் முடிவடைகிறது.

( தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கும், ஆதாமின் மனைவியாகிய ஸ்திரீக்கும், ஸ்திரீயை வஞ்சித்த சர்ப்பமாகிய சாத்தானுக்கும், கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தின் தொடர்புடைய ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் முடிவடைகிறது.)

## பொருளடக்கம்-1

1-0 ஆதாமின் குமார்களாகிய காயீனும் ஆபேலும், தங்களுடைய காணிக்கையை கர்த்தருக்கு பலிசெலுத்துகிற விசுவாசத்தில், கருத்து வேறுபட்டதின் மூலம் காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான்; அப்பொழுது தேவனாகிய கர்த்தர் மனிதனுக்கு கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்குகிறது:-

காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்.

காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கிகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது. அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது? நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார். Gen 4:3-7

காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான்; அவர்கள் வயல்வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான். கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்; அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான்.

அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது. இப்பொழுது உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக் கொள்ளத் தன் வாயைத் திறந்த இந்தப் பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய். நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய் என்றார். Gen 4:8-12

அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது. இன்று என்னை இந்தத் தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்; நான் உமது சமுகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன்; என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே என்றான்.

அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: காயீனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழு பழி சுமரும் என்று சொல்லி; காயீனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்றுபோடாதபடிக்குக் கர்த்தர் அவன்மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார். Gen 4:13-15

# தேவன் மனிதனுக்கு கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தில் முடிவடைகிறது.

( தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கும், ஆதாமின் மனைவியாகிய ஸ்திரீக்கும், ஸ்திரீயை வஞ்சித்த சர்ப்பமாகிய சாத்தானுக்கும், கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தின் தொடர்புடைய ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் முடிவடைகிறது.)

## பொருளடக்கம்-2

2-0 காயீனும், காயினின் வழிகளில் நடக்கிற அவனுடைய சந்ததிகளும், தேவன் அங்கிகரிக்காத .காணிக்கைகளை பலிபீடத்திற்கு கொண்டுவருகிறபோது: தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட சாபங்களின் மூலம் அடையாளம் கண்டுபிடிக்கிறவர்கள் யாரும் அவர்களை கொல்லாதபடிக்கு; தேவனுடைய முத்திரை அடையாளத்தை போட்டார்:-

ஆபேலின் வழிகளில் நடக்கிற அவனுடைய சந்ததிகளான நீதிமான்கள், தங்களுடைய காணிக்கையை கர்த்தருக்கு பலிசெலுத்த வருகிறபோது: காயினின் வழிகளில் நடக்கிற அவனுடைய சந்ததிகளான துன்மார்க்களிடமிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளுவதற்காகவும், காயின் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட சாபங்களின் மூலம் காயினை அடையாளம் கண்டு கொள்ளுகிறவர்கள் யாரும் காயினைக் கொல்லாதபடிக்கும்;

தேவனே காயின் மேலும் காயினின் வழிகளில் நடக்கிற அவனுடைய சந்ததிகளின் மேலும் பழிவாங்குவதற்கும் பலன் அளிப்பதற்கும் தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களில் முதலாவது தேவனுடைய முத்திரை அடையாளத்தை தேவனே நேரடியாக காயினுக்கும் அவன் சந்ததியாருக்கும் போடுகிறார்.

2-1 காயினின் அடையாளத்தை காட்டிக்கொடுக்கும் தேவனுடைய சாபங்கள்:-

1. காயின் தன் சகோதரனாகிய ஆபேலை கொலை செய்ததும் அல்லாமல், காயின் தன்னுடைய ஆத்துமாவையும் கொலை செய்தபடியால், ஏற்கனவே ஆதாமினால் ஒரு முறை தேவனால் சபிக்கப்பட்ட பூமி மீண்டும் காயினின் பாவத்தினால் இரண்டாவது முறையாக சபிக்கப்படுகிறது, இதனால் காயினும் அவன் சந்ததியாரும் சபிக்கப்பட்டிருப்பார்கள். Gen 4:11,

2. காயின் நிலத்தை பயிரிடும்போது / தன் இருதயத்தில் தேவ வார்த்தைகளை விதைக்கும்போது அது தன் பலனை இனி காயினுக்கு கொடுக்காது. Gen 4:12,

3. காயின் தேவனுடைய சமுகத்தை விட்டு, விலகி மறைந்து, பூமியில் தன் கைகளின் கிரியைகளில் நிலையற்று அலைகிறவனாக இருப்பான். Gen 4:13-14, Jer 4:1-4,

கீழே குறிப்பிட்ட வேத வசனங்களின்படி காயினின் வழிகளில் நடக்கிற அவனுடைய சந்ததிகள், மார்க்கம் தப்பி நடக்கிற நட்சத்திரங்களாக இருந்து, ஆபேலைப் போல உள்ள நீதிமான்களின் இரத்தப்பழிக்கு ஆளாக மாறுகிறார்கள். Jud 1:10-13, Mat 23:35-36, Mat 23:13-15, Lev 21:18, Deu 27:18, Isa 42:18-19, Mat 15:14, Rom 2:19, Rev 3:17-18, Jer 2:20-25, Jer 14:10-12, Jer 14:13-15,

காயினின் சந்ததியார், ஆதாமிற்கும், காயினுக்கும் தேவன் கொடுத்த சாபங்களையே மீண்டும் தேவனுக்கு காணிக்கையாக பலிபீடத்திற்கு கொண்டு வருகிறபோது, பலி பீடத்தின் தூதனால் நியாயத் தீர்க்கப்படுவார்கள். Exo 29:37, Exo 30:29, Lev 10:1-3, Rev 8:1-6, Rev 19:1-4,

விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினது போல, ஆவிக்குரிய ஆபேலின் சந்ததிகளும் தேவன் நல்லது என்று குறிப்பிட்டவைகளை தங்களுடைய விசுவாசத்தில் கண்டறிந்து,

அவைகளை கர்த்தருக்கு பலி செலுத்தாமல் இருக்கும்போது, சாபம் / பாவம் உன் இருதய வாசற்படியில் பலி மிருகமாக கட்டப்பட்டு படுத்திருக்கிறது, நீ அவைகளை உன் இருதயத்தில் பலி செலுத்தினால் சாபம் / பாவத்தின் ஆசை உன்னை பற்றி இருக்காது, மேலும் நீ பாவத்தை / சாபத்தை ஜெயங்கொண்டு, அவைகளை உனக்கு கீழ்படுத்தி நீ அவைகளை ஆண்டு கொள்ளுவாய், இதனால் உன்னையும் உன் பலியையும் கர்த்தர் அங்கிகரிப்பார்.

உன் சாபத்தை / தீமைகளை பாவத்தை உன் இருதயத்தில் பலி செலுத்தி, அவைகளை உனக்கு நன்மையாக மாற்றிக் கொள்ள ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்திருந்தும், அவைகளை

உன் இருதயததில் பலி செலுத்தாமல் இருக்கும்போது; உன் இருதய வாசற்படியில் பலி மிருகமாக கட்டப்பட்டிருந்த சாபம் / பாவம் / தீமை கட்டவிழ்க்கப்பட்டு உன் இருயத்திற்கு உள்ளே பிரவேசிக்கிறது. அப்பொழுது சாபம் / தீமை / பாவம் /ஆசை, உன்னை பற்றியிருக்கும், நீ அவைகளுக்கு அடிமையாக இருப்பாய், அவைகள் உன்னை ஆட்சி செய்யும்.

4. காயினே உனக்கு ஏன் எரிச்சல் உண்டானது ? Gen 4:6,

காயினுடைய இருதய வாசற்படியிலே பலி மிருகமாக கட்டப்பட்டிருந்த சாபம் / பாவம் கட்ட விழ்க்கப்பட்டு காயினுடைய இருதயத்திற்குள்ளே, பிரவேசித்த படியால் காயினுக்கு எரிச்சல் உண்டானது.

5. காயினே உன்முக நாடி ஏன் வேறுபட்டது ? Gen 4:6, ,

காயினுடைய இருதயத்திற்குள்ளே பிரவேசித்த பாவம் / சாபம் காயினுடைய ஆத்துமாவை அடிமைப்படுத்தி, காயினை ஆட்சி செய்கிறபடியால் காயினுடைய முக நாடி வேறுபட்டது.

காயின் நிலத்தின் கனிகளை, கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டு வந்தபோது காயினையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரிக்க வில்லை, ஏனென்றால் ஆதாமின் பாவத்தினால் ஏற்கனவே பூமி சபிக்கப்பட்டிருக்கிறது Gen 1:29-31,Gen 3:17-19,

சபிக்கப்பட்ட பூமியில் விளைந்த நிலத்தின் கனிகளை கர்த்தருக்கு, காயின் காணிக்கையாக கொண்டு வந்திருக்கும்போது அவைகள் நிச்சயமாக முள்ளும், குருக்கும் உள்ளவைகளாக இருந்து சபிக்கப்பட்டவைகளாகத்தான் இருக்க முடியும்.

ஆதாமின் பாவத்தினால் ஏற்கனவே சபிக்கப்பட்ட பூமியில் விளைந்த சாபங்களை / ஜென்ம கரும பாவங்களை காயின் தன்னுடைய இருதயத்தில் பலி செலுத்தி தீமைகளை நன்மையாக ஜெயங் கொள்ளவேண்டும், ஆனால் காயினோ தேவன் ஆதாமிற்கு கொடுத்த சாபங்களையே மீண்டும் தேவனுக்கு காணிக்கையாக கொண்டு வருகிறான், இதனால் காயினையும் அவன் காணிக்கை யையும் கர்த்தர் அங்கிகரிக்க வில்லை. . Gen 3:17-18,

6. நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ?

காயினுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி அவன் முக நாடி வேறுபட்டபோது, கர்த்தர் காயினுக்கு மறுமொழியாக, நீ நன்மை செய்தால் உனக்கு மேன்மை இல்லையோ? Gen 4:7,

தேவன் நல்லது என்று குறிப்பிட்டவைகளை தேர்ந்தெடுத்து, அவைகளில் மேலும் நல்லவைகளை நீயும் உன்னுடைய விசுவாசத் தால் பரிசோதித்து, அவைகளை கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டு வந்திருந்தால் உனக்கு மேன்மை இல்லையோ! உன்னையும், உன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரியாமல் இருப்பாரோ!

7 நீ நன்மை செய்யாதிருந்தால் :-

நீ நன்மை செய்யாதிருந்தால், ஆதாமின் பாவத்தினால் சபிக்கப்பட்ட பூமியில் விளைந்த சாபங்களை / தீமைகளை உன் இருதயத்தில் பலி செலுத்தி அவைகளை நன்மையாக மாற்ற ஒரு வாய்ப்பு காத்திருக்கிறது. Gen 4:7,

2-2 பரலோகத்திலுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமின்; தேவனுடைய ஆலயம், பலிபீடம், பிரகாரம், ஆகிய இடங்களில் உள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின் பொருளை சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்கள் அல்லது தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள்: தேவனுடைய ஆறு முத்திரை அடையாளங்களை, பரிசுத்த ஸ்தலமாகிய தேவனுடைய ஆலயத்தில் **வெளிப்படுத்துகிறார்கள்**:-

தேவனுடைய ஆறு முத்திரை அடையாளங்களை, இரண்டாம் உடன்படிக்கையின் புதிய ஏற்பாடு, தொடர்புடைய ஆவிக்குரியதாயிருக்கிற ஆசரிப்பு முறைகள் , ஆராதனை முறைகள் மூலம்; பரலோகத்திலுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமின்; தேவனுடைய ஆலயம், பலிபீடம், பிரகாரம், ஆகிய இடங்களில் உள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின் பொருளை சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்கள் அல்லது தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள்:

பரிசுத்த ஸ்தலமாகிய தேவனுடைய ஆலயத்தில் அல்லது இருதயத்தில் நிற்றுகொண்டிருக்கிற பாழாக்குகிற அருவருப்பைக்குறித்தும், நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக் கிரியைகளைக் கண்டு, கேட்டு நீதியுள்ள தங்களுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்டு, அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும், பெருமூச்சுவிட்டழுகிறவர்கள்:

கிழே குறிப்பிட்ட தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களை, ஆவியின்படி தங்ளுடைய நெற்றிகளில் / அறிவில் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

1 புறஜாதிகளின் எந்த முறைகளையும் பின்பற்றக்கூடாது.
2 பலிபீடத்தின் பிரமாணங்களை பின் பற்றி நடக்க வேண்டும்.
3 கர்த்தருடைய பஸ்கா விருத்தை புசிக்க வேண்டும்.

4 ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும்
5 மனச்சாட்சியின் பிரமாணத்திற்கு கீழ்படிய வேண்டும்
6 இயேசு கிறிஸ்துவின் சாட்சியை பின்பற்றி நடக்க வேண்டும்
7 பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தேவனுடைய வீட்டிலே நியாயத்தீர்ப்பு துவங்கினபடியால், பாதாளத்தின் வாசல்கள் திறக்கப்பட்டு; பெருஞ்சூளையின் புகையைப்போல கர்த்தருடைய சங்கார தூதனுடைய பட்டயமாகிய கொள்ளை நோய், எழுத்தின்படியும் ஆவியின்படியும், மனுஷரை சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு **வெளிப்பட்டபோது** **Rev 9:1-11;** 1Pe 4:17-18;

பூமியின் புல்லையும் பசுமையான எந்தப் பூண்டையும் எந்த மரத்தையும் சேதப்படுத்தாமல், தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரைமாத்திரம் சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. Rev 9:4

கிழே குறிப்பிட்ட நாண்கு வகையான ஜனங்கள், கர்த்தருடைய சங்கார தூதனுடைய பட்டயத்திற்கு எழுத்தின்படியும் ஆவியின்படியும், தப்புவிக்கப்படுகிறார்கள்

1 பூமியின் புல் - பசுமையான புல்லைப்போல நற்கிரியைகளை உடையவர்கள்.
2 பசுமையான பூண்டு - இருதயத்தின் நல்ல ஆலோசனைகளை உடையவர்கள்.
3 பூமியின் மரம் - நல்ல கனிகளை உடையவர்கள்.
4 ஏழு முத்திரை அடையாளங்களை, நெற்றிகளில் ஏற்றுக்கொண்டவர்கள்.

தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களை தங்ளுடைய நெற்றிகளில் / அறிவில் ஏற்றுக்கொண்டு மனந்திரும்பாமல், அவைகளுக்கு விரோதமாகவோ, இனையாகவோ, சிந்தித்து செயல்பட முயற்சி செய்கிறபோது: ஆவியின்படி அந்திக் கிறிஸ்துவின் முத்திரை அடையாளங்களை, தங்ளுடைய நெற்றியிலும், வலது கையிலும், / அறிவிலும் கிரியைகளிலும் பெற்றுக்கொள்ளுகிறார்கள்;

இவர்கள் வலுசர்ப்பத்தின் வாயிலும், மிருகத்தின் வாயிலும், கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து; புறப்படுகிற தவளைகளுக்கு ஒப்பான மூன்று பிசாசுகளின் அசுத்த ஆவிகளுக்கு அடிமைப்பட்டு, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும், வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.Rev 16:13-15

இவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டி சபையின் மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசு கிறிஸ்துவைக் குறித்துச்

சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணி, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே பங்கடைவார்கள்

# தேவன் மனிதனுக்கு கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தில் முடிவடைகிறது.

(தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கும், ஆதாமின் மனைவியாகிய ஸ்திரீக்கும், ஸ்திரீயை வஞ்சித்த சர்ப்பமாகிய சாத்தானுக்கும், கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தின் தொடர்புடைய ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் முடிவடைகிறது.)

## பொருளடக்கம்-3

3-0 இரண்டாம் ஆதாமாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, பலிபீடத்தின் ஊழியம் செய்து, அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, நாம் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டபோது; முதலாம் ஆதாமின் மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பின் சாபங்கள் நீக்கப்படுகிறது:-

ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானபோது: தேவனாகிய கர்த்தர், ஆதாமின் விலா எலும்பாகிய ஸ்திரீக்கு கொடுத்த சாபங்களும் நீக்கப்படுகிறது.

நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது. அப்படியிருந்தும், மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்.

ஆனாலும் மீறுதலின் பலன் கிருபை வரத்தின் பலனுக்கு ஒப்பானதல்ல. எப்படியெனில், ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க, தேவனுடைய கிருபையும் இயேசு கிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது. Rom 5:13-15

மேலும் ஒருவன் பாவஞ்செய்ததினால் உண்டான தீர்ப்பு தேவன் அருளும் ஈவுக்கு ஒப்பானதல்ல; அந்தத் தீர்ப்பு ஒரே குற்றத்தினிமித்தம் ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது; கிருபைவரமோ அநேக குற்றங்களை நீக்கி நீதிவிளங்கும் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது.

அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே.

ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள். Rom 5:16-19

3-1 தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கு கொடுத்த சாபங்கள்:-

1 தேவனாகிய கர்த்தர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்;

2 நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்

3 நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார். Gen 3:17-19

4 தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும்

என்று, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்.

5 தேவனாகிய கர்த்தர்: மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார். Gen 3:22-24

3-2 தேவனாகிய கர்த்தர்: ஆதாமின் விலா எலும்பாகிய ஸ்திரீக்கு கொடுத்த சாபங்கள்:-

1 தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள். தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார்.

2 தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயையும் சர்ப்பத்தையும் பார்த்து: உனக்கும் ஸ்திரீக்கும், பகை உண்டாக்குவேன்; உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்;

3 ஸ்திரீயும், ஸ்திரீயின் வித்துக்களும்; இணைந்து சர்ப்பத்தையும் சர்ப்பத்தின் வித்துக்களின் தலையை நசுக்குவார்கள், சர்ப்பமும் சர்ப்பத்தின் வித்துக்களும் இணைந்து ஸ்திரீயையும், ஸ்திரீயின் வித்துக்களின்; குதிங்காலை நசுக்குவார்கள்

# தேவன் மனிதனுக்கு கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தில் முடிவடைகிறது.

(தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கும், ஆதாமின் மனைவியாகிய ஸ்திரீக்கும், ஸ்திரீயை வஞ்சித்த சர்ப்பமாகிய சாத்தானுக்கும், கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தின் தொடர்புடைய ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் முடிவடைகிறது.)

# பொருளடக்கம்-4

4-0 ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்:-

தேவனாகிய கர்த்தர் ஆதாமின் நாசியிலே ஜீவசுவாசத்தை ஊதினபோது, ஜீவாத்துமாவானான் அதுபோல: கிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்ட நித்தியஜீவ வார்த்தைகளை தங்களுடைய ஆத்துமாவின் ஜீவசுவாசமாக ஏற்றுக்கொள்ளுகிறவர்கள்; அவனவன் தன் தன் வரிசையிலே நித்திய ஜீவனில் உயிர்ப்பிக்கப்பட்டு ஜீவாத்துமாவாக பிழைக்கிறார்கள்.

4-1 பிதாவினால் கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுகிறபோது: முதற்பலனாகிய கிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்ட நித்தியஜீவ வார்த்தைகளை தங்களுடைய ஆத்துமாவின் ஜீவசுவாசமாக ஏற்றுக்கொள்ளுகிறவர்கள்; கிறிஸ்துவின் சரீர அவயவங்களாகிய மணவாட்டி சபையாக அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவார்கள்:-

பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான். என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். Joh 5:21-24

மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார். அவர்

மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். Joh 5:25-27

நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். Joh 17:6 -7

நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே. Joh 17:8-9

என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன். நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும். Joh 17:10-11

நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை. Joh 17:12

4-2 கிறிஸ்துவின் சரீர அவயவங்களாகிய மணவாட்டி சபை: முதற்பலனாகிய கிறிஸ்துவின் உடன்படிக்கையில் நிலைத்திருந்து; நித்தியஜீவ வார்த்தைகளை கர்ப்பத்தரித்து, அவைகளை ஜீவசுவாசமாக வெளிப்படுத்துகிறபோது தேவபக்தியுள்ள சந்ததியைப் பெற்றெடுக்கிறார்கள்:-

அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருமே; இதோ, அவர்கள் எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று; எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று; நாங்கள் அறுப்புண்டுபோகிறோம் என்கிறார்கள்.

ஆகையால் நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், இதோ, என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரவும் பண்ணுவேன். Eze 37:11-12

என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப்பண்ணும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள். என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்;

நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்; இதைச் சொன்னேன், இதைச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார். Eze 37:13-14

பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். Joh 5:28-29

நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். Joh 17:14-15

நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன். Joh 17:16-19

நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். Joh 17:20-21

4-3 முதற்பலனாகிய கிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்ட நித்தியஜீவ வார்த்தைகளை தங்களுடைய ஆத்துமாவின் ஜீவசுவாசமாக ஏற்றுக்கொள்ளாதவர்கள்; பூமிக்குரிய நயவஞ்சகமான ஆசீர்வாதங்களினால் வஞ்சிக்கப்பட்டு, நன்மை தீமைகளை வெளிப்படுத்துகிற பாவிகளின் பிரமாணமாகிய நியாயப்பிரமாண நீதியினால் அந்திக் கிறிஸ்துவின் மணவாட்டி சபையாக அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவார்கள்:-

ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு துணையாக கொடுக்கப்பட்ட ஸ்திரியாகிய சபையானது பூமிக்குரிய நயவஞ்சகமான ஆசீர்வாதங்களினால் வஞ்சிக்கப்பட்டு, நன்மை தீமைகளை வெளிப்படுத்துகிற பாவிகளின் பிரமாணமாகிய நியாயப்பிரமாண நீதியின் கிரியைகளை புசித்து ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கும் அவைகளையே பின்பற்றும்படி ஸ்திரியாகிய சபை கொடுக்கிறது, இதனால் சபையும், ஜெயங்கொள்ளுகிறவர்களும் தேவனுடைய ரூபத்தையும் சாயலையும் இழந்து போனார்கள்.

முதற்பலனாகிய கிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்ட நித்தியஜீவ வார்த்தைகளை தங்களுடைய ஆத்துமாவின் ஜீவசுவாசமாக ஏற்றுக்கொள்ளாமல் தொடர்ந்து மரணத்திலே நிலைத்திருக்கிறபடியால் ; தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கு கொடுத்த சாபங்கள் இவர்களை பின்தொடர்கிறது

தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கு கொடுத்த சாபங்கள்:-

1 தேவனாகிய கர்த்தர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்;

2 நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்

3 நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார். Gen 3:17-19

4 தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்.

5 தேவனாகிய கர்த்தர்: மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார். Gen 3:22-24

4-4 பூமிக்குரிய நயவஞ்சகமான ஆசீர்வாதங்களினால் சபையானது வஞ்சிக்கப்பட்டு, நன்மை தீமைகளை வெளிப்படுத்துகிற பாவிகளின் பிரமாணமாகிய நியாயப்பிரமாண நீதியினால் தேவ பத்தியில்லாத விபஞ்சார சந்ததியை சபை பெற்றெடுக்கிறபடியால் தேவனாகிய கர்த்தர்: ஆதாமின் விலா எலும்பாகிய ஸ்திரீக்கு கொடுத்த சாபங்கள் இவர்களை பின்தொடர்கிறது:-

ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் தேவனுடைய ரூபமும் சாயலுமான நித்திய மகிமையை தரித்துக் கொண்டிருக்கும்போது, தேவனுடைய கட்டளையின்படி நன்மை தீமை இன்னதென்று பகுத்தறிகிற அறிவை தங்களுடைய ஆவிக்குரிய ஆகாரமாக புசிக்காமல்; தேவனுடைய நீதியின் பிரமாணங்களையும், நித்திய ஜீவ வார்த்தைகளையும் ஆவிக்குரிய ஆகாரமாக புசிக்கும்போது, அவர்கள் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள் Gen_3:11, Gen_2:15-17, Gen_2:21-25, 2Co_5:1-3,

ஆதாமும் ஏவாளும் எப்பொழுது தேவனுடைய கட்டளையை மீறி, நன்மை தீமை இன்னதென்று பகுத்தறிகிற அறிவை தங்களுடைய ஆவிக்குரிய ஆகாரமாக புசிக்கிறார்களோ அப்பொழுது தேவனுடைய ரூபமும் சாயலுமான நித்திய மகிமை, அவர்களை விட்டு விலகுகிறபடியால், அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு, அவர்களுடைய புத்தி தெளிகிறபடியால் தங்களுடைய நிர்வாணம் தங்களுக்கு வெளிப்பட்டு / உணர்த்தப்பட்டு வெட்கம் அடைகிறார்கள். Gen_3:5-7, 2Co_5:1-8, 1Jo_3:20,

இஸ்ரவேல் ஜனங்கள் கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாமல் நன்மை தீமைகளை வெளிப்படுத்துகிற மனசாட்சியின் பிரமாணமாகிய நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நீதிப்பிரமாணத்தை தேடின படியால், சீயோனிலிருக்கிற மூலைக்கல்லில் இடறி விழுந்தார்கள் அது போல;

நன்மை தீமைகளை பகுத்தறிகிற அறிவினால் வெளிப்படுகிற கிரியைகளின் மூலம், ஆதாமும் ஏவாளும் தேவனுடைய ரூபமும் சாயலுமான நித்திய மகிமையிலும் நித்திய ஜீவனிலும் பிழைக்க வகை தேடினபோது, ஏதேன் தோட்டத்தில் தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையில் மரித்து இடறி விழுந்தார்கள். Rom_9:30-33, Rom_3:20-21, Rom_7:7-11, Rom_2:14-15, Rom_2:27, Eze_20:23-25, Eze_33:12-16,

நன்மை தீமை இன்னதென்று பகுத்தறிகிற அறிவை ஆவிக்குரிய ஆகாரமாக புசித்து, தங்கள் கண்கள் திறக்கப்பட்டதினால் தங்களுடைய நிர்வாணமாகிய பாவங்களை உணர்ந்து கொண்டவர்களுக்கு தேவனுடைய சத்தத்தை கேட்க முடிகிறது.

அல்லது தேவனுடைய நீதியின் பிரமாணங்களையும், நித்திய ஜீவ வார்த்தைகளையும் உணர்ந்து கொண்டவர்களுக்கு தன்னுடைய / மற்றவர்களுடைய நிர்வாணமாகிய பாவங்களை உணர்ந்து கொள்ள முடிகிறது. Gen_3:6-8,Exo_16:8, Exo_32:21-27, , Hos_2:8-10, Rev_3:17-19, Rev_16:15,

ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு துணையாக கொடுக்கப்பட்ட சபையானது, தேவனுடைய நீதியின் பிரமாணங்களையும், நித்திய ஜீவ வார்த்தைகளையும் ஆவிக்குரிய ஆகாரமாக கொடுத்து, ஜெயங்கொள்ளுகிறவர்களை உருவாக்காமல் / தேவ பத்தியுள்ள சந்ததியை பிரசவிக்காமல், பூமிக்குரிய நயவஞ்சகமான ஆசீர்வாதங்களினால் சபையானது வஞ்சிக்கப்பட்டு, நன்மை தீமைகளை வெளிப்படுத்துகிற பாவிகளின் பிரமாணமாகிய நியாயப்பிரமாண நீதியினால் தேவ பத்தியில்லாத விபஞ்சார சந்ததியை சபை பெற்றெடுக்கிறது.

ஸ்திரியாகிய சபை இந்த காரியத்தை செய்தபடியால் தேவன் ஸ்திரியாகிய சபைக்கு கொடுத்த சாபத்தினால், இப்பொழுதும் ஆவிக்குரிய நிலையில் ஆத்துமாக்களை பெற்றெடுக்கும் போது மிகவும் வேதனையோடு சபை பெற்றெடுக்கிறது. 2Co_11:2-4, 1Ti_2:11-15, 1Ti_1:5-11, Job_14:1-2, Job_15:14, Job_25:4-6, Rom_2:17-24, Gal_4:21-25, Gal_4:26-31, Pro_30:23,

தேவனாகிய கர்த்தர்: ஆதாமின் விலா எலும்பாகிய ஸ்திரீக்கு கொடுத்த சாபங்கள்:-

1 தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள். தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார்.

# தேவன் மனிதனுக்கு கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தில் முடிவடைகிறது.

(தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கும், ஆதாமின் மனைவியாகிய ஸ்திரீக்கும், ஸ்திரீயை வஞ்சித்த சர்ப்பமாகிய சாத்தானுக்கும், கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தின் தொடர்புடைய ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் முடிவடைகிறது.)

## பொருளடக்கம்-5

5-0 சீயோன் மலையில் உள்ள ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமின் தேவனுடைய ஆலயத்திலும், பலிபீடத்திலும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்:-

சீயோன் மலையில் உள்ள ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமின்; தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும், அதில் தொழுதுகொள்ளுகிறவர்களையும்; பரிசுத்தவான்களுடைய நீதியின் கிரியைகளின் மூலம் எண்ணிப்பார்கிறபோது: பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையும்,

பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளும், தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை 1,44,000; வரிசைகளில் வருகிறவர்கள் நிறைவாகும்போது புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் மூலம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக,பெற்றுக்கொள்ளுகிறார்கள் Rev 11:1-2; Heb 12:23

5-1 நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய், நமக்காக தமது மாம்சமாகிய திரையின் வழியாக; மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு, புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்; அழைக்கப்பட்டவர்கள் தேவனுடைய நகரமாகிய

பரம எருசலேமில் ; வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரலோகத்திலுள்ளவைகளுக்கு, வரப்போகிற நன்மைகளின் பொருளை சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார்.

நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்.

அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார். Heb 6:17-20

5-2 புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கிறவர்கள்: தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நிலையானதும்; உறுதியானதுமான நித்திய ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள்:-

நமக்கு இரண்டாம் கூடாரமாகிய மகா பரிசுத்த ஸ்தலத்தில் அல்லது ஆவி,ஆத்துமாவில், ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளைப் புசிக்கிறதற்குக் முதலாம் கூடாரமாகிய சரீரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை. Heb 13:9-10

முதலாங்கூடாரம் நிற்குமளவும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார். அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக் கூடாதவைகளாயிருக்கிறது. Heb 9:8-9

முதலாம் கூடாரமாகிய பாவ சரீர அவயவங்களை, பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, இரண்டாம் திரையாகிய பாவ மாம்சத்திலே, பாவத்தின் இச்சைகளை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்போது; தங்களுடைய மனச்சாட்சியில் அல்லது ஆவி,ஆத்துமாவில் மரணத்தை உருவாக்கும் செத்தக் கிரியைகள் சுத்திகரிக்கப்படுவதால், Heb 9:11-17 ;

இரண்டாம் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ் வரைக்கும் இரண்டாகக் கிழிக்கப்பட்டு, இரண்டாம் கூடாரமாகிய மகா பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற மார்க்கம் பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தபடுகிறது. Rom 8:1-3 Rom 12:1-3

இரண்டாம் உடன்படிக்கையின் புதிய ஏற்பாடு, தொடர்புடைய ஆவிக்குரியதாயிருக்கிற ஆசரிப்பு முறைகள் , ஆராதனை முறைகள் மூலம்; பரலோகத்திலுள்ளவைகளுக்கு, வரப்போகிற நன்மைகளின் பொருளை சுதந்தரித்துக்கொள்ளுவதற்காக; முதலாம் கூடாரமாகிய பாவ சரீர அவயவங்களை, பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறவர்கள்: Heb 9:22-26

இரண்டாம் கூடாரமாகிய ஆவி,ஆத்துமாவில், பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொண்டு, புத்தியுள்ள ஆராதனை செய்து: இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, தங்களுடைய மனம் புதிதாகிறதினாலே; ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே ஆவி,ஆத்துமாவில், மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபமடைகிறார்கள்.

மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிற பொன்னாற்செய்த தூபகலசம், முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டி; அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம், ஆரோனுடைய தளிர்த்த கோல், உடன்படிக்கையின் கற்பலகைகள்; ஆகிய இவைகளின் தொடர்புடைய ஆவிக்குரிய பொருளுக்கேற்றபடி: (2Co 3:6-18; Heb 9:3-5)

ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு பரிசுத்த ஆவியானவரால் தமது சித்தத்தின்படியே, தேவன் அவனவனுக்குப் பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப்பிரமாணத்தின்படியே, தங்களுடைய இருதய பலிபீடத்திற்குரியவைகளைப் புசித்து, ஒரே சரீரமாகிய கிறிஸ்துவின் அநேக அவயவங்கள் அல்லது 1,44,000, வரிசையில் வருகிறவர்கள்; நீதியைக் கொடுக்கும் ஊழியர் அழைப்பை சுதந்தரித்துக்கொண்டு,

இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, தங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமடைந்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார்கள்; இவர்கள் சீயோன் மலையில் உள்ள ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமின்; தேவனுடைய ஆலயத்திற்கும் , பலிபீடத்திற்கும் வந்தடையகிறபோது புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் மூலம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை பெற்றுக்கொள்ளுகிறார்கள் Rev 11:1-2; Heb 12:23

# தேவன் மனிதனுக்கு கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தில் முடிவடைகிறது.

(தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கும், ஆதாமின் மனைவியாகிய ஸ்திரீக்கும், ஸ்திரீயை வஞ்சித்த சர்ப்பமாகிய சாத்தானுக்கும், கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தின் தொடர்புடைய ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் முடிவடைகிறது.)

## பொருளடக்கம்-6

6-0 தேவனுடைய பரிசுத்த ஸ்தலம், மற்றும் மகா பரிசுத்த ஸ்தலம் அல்லது பலிபீடத்தின் ஊழியத்தை நிறைவேற்றுகிற ஆவிக்குரிய யூதர்களுக்கு விசேஷமாக உபத்திரவ காலத்தில் பல நன்மைகளை செய்து, ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரத்திலிருந்து, தேவனை மகிமை படுத்துகிற புறஜாதிகளின் ஆசீர்வாதங்கள்:-

தேவனுடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற புறஜாதிகள், தேவனுடைய பரிசுத்த ஸ்தலம், மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியத்தை நிறைவேற்றுகிற ஆவிக்குரிய யூதர்களுக்கு, அல்லது கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அவயவங்களாகிய 1,44,000, வரிசையில் வருகிற ஊழியர் ஒருவனுக்கு: விசேஷமாக உபத்திரவ காலத்தில் கீழே குறிப்பிட்ட நன்மைகளில் நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.

1 தீர்க்கதரிசி / நீதிமான் / சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான். Mat 10:40

2 பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்;
3 தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்;
4 அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்;
5 வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்;
6 வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்;
7 காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்.

6-1 தேவனுடைய பரிசுத்த ஸ்தலம், மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியத்தை நிறைவேற்றுகிற ஆவிக்குரிய யூதர்களுக்கு விசேஷமாக உபத்திரவ காலத்தில் பல நன்மைகளை செய்து, மரணத்தை சந்திக்காமல் இருக்கிறவர்களுடைய ஆசீர்வாதங்கள்:-

தேவனுடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற புறஜாதிகள்: முதலாம் கூடாரமாகிய பரிசுத்த ஸ்தலம், மற்றும் இரண்டாம் கூடாரமாகிய மகா பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியத்தை நிறைவேற்றுகிற மிகவும் சிறியவராகிய ஊழியர் ஒருவனுக்கு:

விசேஷமாக உபத்திரவ காலத்தில் பல நன்மைகளை செய்து, மரணத்தை சந்திக்காமல் இருக்கிறவர்களை: ராஜா தமது வலது பக்கத்தில் பிரித்தெடுத்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற தேவனுடைய இராஜ்யமாகிய ஆயிரம் ஆண்டு இராஜ்யத்தைச் நேரடியாக சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்பார். Mat 25:31-46

6-2 தேவனுடைய பரிசுத்த ஸ்தலம், மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியத்தை நிறைவேற்றுகிற ஆவிக்குரிய யூதர்களுக்கு, விசேஷமாக உபத்திரவ காலத்தில் பல நன்மைகளை செய்து, மரணத்தை சந்தித்து இரத்தசாட்சியாக மரிக்கிறவர்களுடைய ஆசீர்வாதங்கள்:-

தேவனுடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற புறஜாதிகள், பரிசுத்த ஸ்தலம், மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியத்தை நிறைவேற்றுகிற மிகவும் சிறியவராகிய ஊழியர் ஒருவனுக்கு; விசேஷமாக உபத்திரவ காலத்தில் பல

நன்மைகளை செய்து, மரணத்தை சந்தித்து இரத்தசாட்சியாக மரிக்கிறவர்கள், நேரடியாக தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக வந்தடைகிறார்கள். Rev 7:9-17

நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்.

# தேவன் மனிதனுக்கு கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தில் முடிவடைகிறது.

(தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கும், ஆதாமின் மனைவியாகிய ஸ்திரீக்கும், ஸ்திரீயை வஞ்சித்த சர்ப்பமாகிய சாத்தானுக்கும், கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தின் தொடர்புடைய ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் முடிவடைகிறது.)

## பொருளடக்கம்-7

7-0-0 கிறிஸ்துவின் மணவாட்டி சபையும், அவர்கள் பெற்றெடுத்த தேவபக்தியுள்ள சந்ததிகளும் இணைந்து தேவனுடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதற்காக, தேவனுடைய இராஜ்யத்தின் சிங்காசனங்களை பூமியில் ஸ்தாபிக்க போராடுகிறபோது; தேவனாகிய கர்த்தர்: ஆதாமின் மனைவியாகிய ஸ்திரீக்கு, கொடுத்த சாபங்கள் நிறைவேறி முடிவடைகிறது:-

7-1-0 கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை, ஜீவ சுவாசமாக தங்களுடைய ஆவி ,ஆத்துமா, சரீரத்தில் பூரணமாக ஏற்றுக்கொண்டு ஜீவனுள்ள ஆத்துமாவாக

பிளைத்துக்கொண்டிருக்கிறவர்கள்: தேவனுக்கும் மனிதனுக்கும் மந்தியில் அடையாளமாக கொடுக்கப்பட்ட தேவனுடைய ஏழு முத்திரைகளின் அடையாளங்களையும் ஏற்றுக்கொள்ளுகிறபோது, கிறிஸ்துவின் மணவாட்டி சபையாக வெளிப்படுகிறார்கள்

7-1-1 இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை ஜீவ சுவாசமாக தங்களுடைய ஆத்துமாவின் அறிவில் பூரணமாக ஏற்றுக்கொள்ளுகிறவர்கள்; முதலாம் ஆதாம் இழந்து போன தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையை, சுதந்தரித்துக்கொள்ளுகிறதற்கு தங்களுடைய ஆவிக்குரிய கண்களின் தரிசனங்கள் வெளிப்படுகிறது

7-1-2 இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை ஜீவ சுவாசமாக தங்களுடைய இருதயத்தின் ஆவியில், பூரணமாக ஏற்றுக்கொள்ளுகிறவர்கள்; முதலாம் ஆதாம் இழந்து போன தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையை, சுதந்தரித்துக்கொள்ளுகிறதற்கு தங்களுடைய இருதயத்தின் ஆவியில், தரிசனங்கள் வெளிப்படுகிறது

7-1-3 இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை ஜீவ சுவாசமாக தங்களுடைய சரீரத்தின் அவயவங்களில், பூரணமாக ஏற்றுக்கொள்ளுகிறவர்கள்; முதலாம் ஆதாம் இழந்து போன தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையை, சுதந்தரித்துக்கொள்ளுகிறதற்கு தங்களுடைய சரீரத்தின் அவயவங்களில், கிரியைகள் வெளிப்படுகிறது

7-1-4 கிறிஸ்துவினுடைய இரத்தத்தினால் தங்கள் மனச்சாட்சியைச் செத்தக் கிரியைகளறச் சுத்திகரிக்கிறவர்கள்: ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்காக, ஆத்துமா, ஆவி, சரீரம் , ஆகிய இவைகளில் ஜீவ சுவாசமாகிய நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின் பொருளுக்கு முழுவதுமாக மாறுவதற்காக, அறிவு, புத்தி, ஞானம், ஆகிய இவைகளை சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள்

7-2-0 தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களின் மூலம் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலன்களாக பிறந்த கிறிஸ்துவின் மணவாட்டி சபை, தேவன் பகிர்ந்த விசுவாச அளவுப்பிரமாணங்களை கர்ப்பந்தரித்து, சத்திய ஆவி, கிறிஸ்துவின் ஆவி, பரிசுத்த ஆவி, ஆகியவைகளுடனும், இணைந்து தேவபக்தியுள்ள சந்ததியைப் பெற்றெடுக்கிறார்கள்:-

7-2-1 தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களின் மூலம் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலன்களாக பிறந்த கிறிஸ்துவின் மணவாட்டி சபை, தேவனுடைய இரட்சிப்பின் உடன்படிக்கையின் மூலம் சத்திய ஆவி, கிறிஸ்துவின் ஆவி, பரிசுத்த ஆவி, ஆகியவைகளுடனும், இணைந்து தேவன் தங்களுக்கு பகிர்ந்த விசுவாச அளவுப்பிரமாணங்களை பெற்றுக்கொள்ளுகிறார்கள்

7-2-2 கிறிஸ்துவின் மணவாட்டி சபை, தேவனுடைய இரட்சிப்பின் உடன்படிக்கையில் நிலைத்திருந்து தேவன் பகிர்ந்த விசுவாச அளவுப்பிரமாணங்களின் மூலம் ஜீவ சுவாசமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ சத்திய வார்த்தைகளை கர்ப்பந்தரித்து, சத்திய ஆவி, கிறிஸ்துவின் ஆவி, பரிசுத்த ஆவி, ஆகியவைகளுடனும், இணைந்து ஆத்துமாக்களை பெற்றெடுக்க பிரசவவேதனை படுகிறபோது தேவபக்தியுள்ள சந்ததியைப் பெற்றெடுக்கிறார்கள்

7-3-0 கிறிஸ்துவின் மணவாட்டி சபையும், அவர்கள் பெற்றெடுத்த தேவபக்தியுள்ள சந்ததிகளும், சத்திய ஆவி, கிறிஸ்துவின் ஆவி, பரிசுத்த ஆவி, ஆகியவைகளுடனும், இணைந்து தேவனுடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதற்காக, தேவனுடைய இராஜ்யத்தின் சிங்காசனங்களை பூமியில் ஸ்தாபிக்க போராடுகிறார்கள்

தேவனுடைய மூன்று தூதருடைய எக்காளசத்தங்களினால் மகா சத்தமிட்டு: பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, ஆபத்துவரும் என்று எச்சரிப்பின் சத்தத்தோடு, தேவனுடைய கோபகலசங்களை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினார்கள்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின:-

7-3-1 தேவனுடைய முதலாவது தூதனுடைய எக்காளசத்தங்களினால் மகா சத்தமிட்டு: பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, ஆபத்துவரும் என்று எச்சரிப்பின் சத்தத்தோடு, தேவனுடைய கோபகலசங்களை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்; அப்பொழுது பாதாளக்குழியின் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்து மனுஷர்களை சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது.

7-3-2 தேவனுடைய இரண்டாவது தூதனுடைய எக்காளசத்தங்களினால் மகா சத்தமிட்டு: பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, ஆபத்துவரும் என்று எச்சரிப்பின் சத்தத்தோடு, தேவனுடைய கோபகலசங்களை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்;

அப்பொழுது தேவனுக்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து ஒரு சத்தந்தோன்றி, ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களை மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு அவிழ்த்துவிடு என்று சொல்லக்கேட்டேன்

7-3-3 தேவனுடைய முன்றாவது தூதனுடைய எக்காளசத்தங்களினால் மகா சத்தமிட்டு: பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, ஆபத்துவரும் என்று எச்சரிப்பின் சத்தத்தோடு, தேவனுடைய கோபகலசங்களை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின

7-4-0 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

7-4-1 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்கள் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் அறிவைப் பெற்று தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவார்கள் Rev_14:1-5, Rev_19:9,

7-4-2 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

கிறிஸ்துவுடன் இருப்பவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பவட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாக இருப்பார்கள்

இவர்கள் பரிசுத்த ஆவி, அபிசேஷக ஆவி, சத்திய ஆவி, ஆகியவைகளின் கிரியைகளினால் ஒருங்கிணைக்கப்படுவார்கள்.

7-4-3 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

ஒரு ஸ்திரீ சகல ஜாதிகளையும் இரும்புக்கோலால் ஆளுகை செய்யும் ஆண்பிள்ளையை பெறும்படி பிரசவ வேதனையடைந்து வருத்தப்பட்டு அலறுகிறாள். Rev_12:1-5,

7-4-4 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில்பெயர்எழுதப்பட்டவர்கள் மிருகத்தின்அடையாளத்தையும் அசுத்த ஆவிகளின் அற்புதங்களையும் தங்கள் அறிவிலும் கிரியைகளிலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் Rev_13:8, Rev_17:8,

7-4-5 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

தேவன் பரிசுத்தவான்களுக்கு1260 நாள் அளவும் தீர்க்கதரிசனம் சொல்லும்படி அதிகாரங்களைக் கொடுத்தார். பரிசுத்தவான்கள் தேவ வசனத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் சாத்தானை ஜெயித்தார்கள். Rev_11:3, Rev_12:11

7-4-6 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

பரிசுத்தவான்கள் தங்களுடைய ஊழியத்தில் ஆவிக்குரிய பட்டயமாகிய தேவ வசனத்தைக்கொண்டு கடிந்து கொண்டு உபதேசம் பண்ணும்போது அதை எதிர்ப்பவர்கள் எழுத்தின் படியுள்ள பட்டயத்தைக்கொண்டு வெட்டுவார்கள் ஆனாலும் சமாதானத்தின் சுவிசேஷத்தை உடையவனாயிருந்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்கள் எலியாவைப்போல பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் Rev_13:9-10, Rev_14:12-13,

7-4-7 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

அந்திக் கிறிஸ்துவின் முத்திரைஅடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக் கொள்ளாதவர்கள் மூன்று அசுத்த ஆவிகளையும் ஜெயங்கொண்டு தேவனுடைய முத்திரை அடை யாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் முதலாம் உயிர்தெழுதலில் பங்கடைவார்கள். Rev_20:4-6

7-4-8 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைந்து அக்கினி கலந்த கண்ணாடிக் கடலில் ஞானஸ்தானம், பெற்று மகிமையடைவார்கள். . Rev_15:2-3, Rev_4:6,

# தேவன் மனிதனுக்கு கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தில் முடிவடைகிறது.

(தேவனாகிய கர்த்தர்: ஆதாமிற்கும், ஆதாமின் மனைவியாகிய ஸ்திரீக்கும், ஸ்திரீயை வஞ்சித்த சர்ப்பமாகிய சாத்தானுக்கும், கொடுத்த சாபங்கள்; பலிபீட ஊழியத்தில் தொடங்கி, பலிபீட ஊழியத்தின் தொடர்புடைய ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் முடிவடைகிறது.)

## பொருளடக்கம்-8

8-0-0 சாத்தான் குடிகொண்டிருக்கிற சிங்காசனங்களை, பூமியில் ஸ்தாபிக்கப்பட்ட நிலையிலே தொடர்ந்து நிலைத்திறுத்துவதற்காக: அந்திக்கிறிஸ்துவின் மணவாட்டி

சபையும், அவர்கள் பெற்றெடுத்த தேவபக்தி இல்லாத விபச்சார சந்ததிகளும்; போராடுகிறபோது, தேவனாகிய கர்த்தர்: ஸ்திரீயை வஞ்சித்த சர்ப்பமாகிய சாத்தானுக்கும், கொடுத்த சாபங்கள் நிறைவேறி முடிவடைகிறது:-

8-1-0 தேவனுக்கும் மனிதனுக்கும் மந்தியில் அடையாளமாக கொடுக்கப்பட்ட தேவனுடைய ஏழு முத்திரைகளின் அடையாளங்களின் மூலம் கிறிஸ்துவின் மணவாட்டி சபையாக வெளிப்பட்டவர்கள்; தேவனுடைய உடன்படிக்கையில் இடறிவிழுகிறபோது, அந்திக்கிறிஸ்துவின் மணவாட்டி சபை வெளிப்படுகிறார்கள்:-

8-1-1 இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை ஜீவ சுவாசமாக தங்களுடைய ஆத்துமாவின் அறிவில் பூரணமாக ஏற்றுக்கொள்ளாதவர்கள்; முதலாம் ஆதாம் இழந்து போன தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையை, சுதந்தரித்துக்கொள்ளாமல், தங்களுடைய ஆவிக்குரிய கண்களின் தரிசனங்களில் இடறிவிழுகிறார்கள்

8-1-2 இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை ஜீவ சுவாசமாக தங்களுடைய இருதயத்தின் ஆவியில், பூரணமாக ஏற்றுக்கொள்ளாதவர்கள்; முதலாம் ஆதாம் இழந்து போன தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையை, சுதந்தரித்துக்கொள்ளாமல், தங்களுடைய இருதயத்தினுடைய ஆவியின், தரிசனங்களில் இடறிவிழுகிறார்கள்

81-3 இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை ஜீவ சுவாசமாக தங்களுடைய சரீரத்தின் அவயவங்களில், பூரணமாக ஏற்றுக்கொள்ளாதவர்கள் ; முதலாம் ஆதாம் இழந்து போன தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையை, சுதந்தரித்துக்கொள்ளாமல் தங்களுடைய சரீரத்தின் அவயவங்களுடைய , கிரியைகளில் இடறிவிழுகிறார்கள்

8-1-4 கிறிஸ்துவினுடைய இரத்தத்தினால் தங்கள் மனச்சாட்சியைச் செத்தக் கிரியைகளறச் சுத்திகரிக்காதவர்கள்: ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்காக, ஆத்துமா, ஆவி, சரீரம் , ஆகிய இவைகளில் ஜீவ சுவாசமாகிய நித்திய ஜீவ வார்த்தைகள் இல்லாதபடியால் பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின்

பொருளுக்கு முழுவதுமாக மாறமுடியாமல், அறிவு, புத்தி, ஞானம், ஆகிய இவைகளில் இடறிவிழுந்து மாயைகளை சுதந்தரித்துக்கொள்ள்ளுகிறார்கள்

8-2-0 அந்திக்கிறிஸ்துவின் முத்திரை அடையாளங்களின் மூலம் சாத்தானுக்கும் அந்திக்கிறிஸ்துவிற்கும் முதற்பலன்களாக பிறந்த அந்திக்கிறிஸ்துவின் மணவாட்டி சபை, பரஸ்திரீயாகிய சபையின் உபதேசங்களை கர்ப்பந்தரித்து, தவளைகளுக்கு ஒப்பான அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் மூன்று அசுத்த ஆவிகளுடனும், இணைந்து தேவபக்தி இல்லாத விபச்சார சந்ததியைப் பெற்றெடுக்கிறார்கள்:-

8-2-1 அந்திக்கிறிஸ்துவின் முத்திரை அடையாளங்களின் மூலம் சாத்தானுக்கும் அந்திக்கிறிஸ்துவிற்கும் முதற்பலன்களாக பிறந்த அந்திக்கிறிஸ்துவின் மணவாட்டி சபை, பரஸ்திரீயாகிய சபையின் உடன்படிக்கையின் மூலம் தங்களுக்கு பகிர்ந்த உபதேசங்களின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக்கொள்ளுகிறார்கள்

8-2-2 அந்திக்கிறிஸ்துவின் மணவாட்டி சபை, பரஸ்திரீயாகிய சபையின் உடன்படிக்கையில் நிலைத்திருந்து, தங்களுக்கு பகிர்ந்த உபதேசங்களின் அளவுப்பிரமாணங்களின் மூலம் உபதேசங்களை கர்ப்பந்தரித்து, தவளைகளுக்கு ஒப்பான அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் மூன்று அசுத்த ஆவிகளுடனும், இணைந்து ஆத்துமாக்களை பெற்றெடுக்க பிரசவவேதனை படுகிறபோது, தேவபக்தி இல்லாத விபச்சார சந்ததியைப் பெற்றெடுக்கிறார்கள்

8-3-0 அந்திக்கிறிஸ்துவின் மணவாட்டி சபையும், அவர்கள் பெற்றெடுத்த தேவபக்தி இல்லாத விபச்சார சந்ததிகளும்; தவளைகளுக்கு ஒப்பான அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் மூன்று அசுத்த ஆவிகளுடனும், இணைந்து; சாத்தான் குடிகொண்டிருக்கிற சிங்காசனங்களை, பூமியில் ஸ்தாபிக்கப்பட்ட நிலையிலே தொடர்ந்து நிலைத்திறுத்துவதற்காக போராடுகிறார்கள்

8-3-1 நான் பார்த்தபோது, இதோ, பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது; அந்த ஆலயத்திலிருந்து ஏழு வாதைகளையுடைய அவ்வேழு தூதர்களும் சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து, மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள். Rev 15:5-6

8-3-2 தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும் உண்டான புகையினாலே தேவாலயம் நிறைந்தது; ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும் முடியும்வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது. அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் அந்த ஏழு தூதருடனே: நீங்கள் போய்த் தேவனுடைய கோபகலசங்களைப் பூமியின்மேல் ஊற்றுங்கள் என்று சொல்லக்கேட்டேன். Rev 15:8 Rev 16:1 ;

8-3-3 ஒரு தூதன் சூரியனில் நிற்கக்கண்டேன்; அவன் வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளையும் பார்த்து: நீங்கள் ராஜாக்களின் மாம்சத்தையும், சேனைத்தலைவர்களின் மாம்சத்தையும், பலவான்களின் மாம்சத்தையும், குதிரைகளின் மாம்சத்தையும், அவைகளின்மேல் ஏறியிருக்கிறவர்களின் மாம்சத்தையும்,

சுயாதீனர் அடிமைகள், சிறியோர் பெரியோர், இவர்களெல்லாருடைய மாம்சத்தையும் பட்சிக்கும்படிக்கு, மகா தேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடிவாருங்கள் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான். மற்றவர்கள் குதிரையின்மேல் ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள்; அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன. Rev 19:17-18 Rev 19:21 ;

8-3-4 மிருகமும் பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரோடும் அவருடைய சேனையோடும் யுத்தம்பண்ணும்படிக்குக் கூடிவரக்கண்டேன். அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள். Rev 19:19-20

8-3-5 ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின்மேல் ஊற்றினான்; அப்பொழுது அதின் ராஜ்யம் இருளடைந்தது; அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக்கொண்டு, தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும், பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை.

ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின்மேல் ஊற்றினான்; அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்துவரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று. Rev 16:10-12

8-3-6 ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கி வரக்கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான். அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும். Rev 20:1-3

8-3-7 அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான்;

8-3-8 அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும்.அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது.

மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள். Rev 20:7-10.

8-4-0 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

8-4-1 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்கள்; மூன்று அசுத்த ஆவிகளினால் வஞ்சிக்கப்பட்டு தேவனுக்கும் தேவனுடைய கற்பனைகளை பின்பற்றுகிறவர்களுக்கும், விரோதமாகவும் இணையாகவும், விசுவாசத்திலும் கிரியைகளிலும் செயல்படுவார்கள். Rev_19:20,

8-4-2 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

மூன்று அசுத்த ஆவிகளின் அற்புதங்களினால் கள்ளத்தீர்க்கதரிசி, அந்திக்கிறிஸ்து, சாத்தான் , ஆகிய இவர்களை பின் தொடர்கிறவர்கள் ஒருங்கிணைக்கப்படுவார்கள் Rev_16:13-15,

8-4-3 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன்; அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். Rev_17:6, Rev_18:4, Rev_18:24,

;

8-4-4 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்படாதவர்கள் மிருகத்தை வணங்கி அசுத்த ஆவிகளின் அற்புதங்களை தங்கள் அறிவிலும் கிரியைகளிலும் ஏற்றுக்கொள்ளுவார்கள் Rev_13:8, Rev_17:8,

8-4-5 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

கீழே விழத்தள்ளப்பட்ட சாத்தான் மிருகத்தின் முத்திரையை பெற்றவர்களுக்கு 42 மாதமளவும் பரிசுத்தவான்களோடு யுத்தம் செய்து ஜெயங்கொள்ளும்படி அதிகாரம் கொடுத்தது Rev_13:1,

8-4-6 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

ஒருவன் பரிசுத்தவான்களுக்கு தீமை செய்யத் திட்டமிடுகிறபோது, அது போலவே தேவன் அவனுக்கு தீமையை திட்டமிட்டுச் செய்வார். ஒருவன் தீமை செய்கிறதிலிருந்து விலகி நன்மை செய்கிறபோது, தேவன் அவன் மேல் வைத்த நியாயத்தீர்ப்பை அவனை விட்டு விலக்குவார்; Rev_11:5,

8-4-7 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

அந்திக் கிறிஸ்துவின் விசுவாசத்தையும்கிரியைகளையும் தங்கள் அறிவிலும் கிரியைகளிலும் ஏற்றுக்கொண்டவர்கள் தேவனுடைய கோபாக்கினையில் பங்கடைவார்கள் Rev_16:1-2, Rev_14:9-11,

8-4-8 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-

மூன்று அசுத்த ஆவிகளின் அற்புதங்களினால் கள்ளத்தீர்க்கதரிசி, அந்திக்கிறிஸ்து, சாத்தான், ஆகிய இவர்களை பின் தொடர்கிறவர்கள் அக்கினி நரகத்தில் தள்ளப்படுவார்கள். Rev_19:20, Rev_20:10,

தேவனாகிய கர்த்தர்: ஆதாமின் விலா எலும்பாகிய ஸ்திரீக்கும் சர்ப்பத்திற்கும் கொடுத்த சாபங்கள்:-

1 தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள். தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார்.

2 தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்; Gen 3:13 -16

3 தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயையும் சர்ப்பத்தையும் பார்த்து: உனக்கும் ஸ்திரீக்கும், பகை உண்டாக்குவேன்; உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்;

4 ஸ்திரீயும், ஸ்திரீயின் வித்துக்களும்; இணைந்து சர்ப்பத்தையும் சர்ப்பத்தின் வித்துக்களின் தலையை நசுக்குவார்கள், சர்ப்பமும் சர்ப்பத்தின் வித்துக்களும் இணைந்து ஸ்திரீயையும், ஸ்திரீயின் வித்துக்களின்; குதிங்காலை நசுக்குவார்கள்

## முடிவுரை

மனச் சாட்சியின் மூலம் தேவனை அறிந்தவர்கள் அவருக்கு துதி, கனம், மகிமை ஆகியவைகளை செலுத்தி ஆவியில் பிழைப்பார்கள். மனச்சாட்சி மூலம் தேவனோடு தொடர்பு கொள்ளும் வழி முறைகளிலிருந்து திசை மாறி, தேவனுக்கு துதி, கனம், மகிமை செலுத்தாதவர்களுக்கு நியாயப்பிரமாணத்தில் சொல்லப்படட் எல்லா சாபங்களும் வந்து அவர்களுக்கு பலிக்கும்.

தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளாதவர்கள் மற்றும் தேவனுடைய சித்தத்தை விட்டு வழிவிலகுகிறவர்கள் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசின் உபதேசங்களுக்கும் அடிமைப்பட்டு தேவ ஆசீர்வாதங்களை இழக்கிறார்கள்.

வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்.

நான் உங்கள் மேல் காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்துக்குச் செவி கொடுங்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ, நாங்கள் கேட்கமாட்டோம் என்கிறார்கள். ஆகையால் ஜாதிகளே கேளுங்கள்; சபையே, அவர்களுக்குள் நடக்கிறதை அறிந்து கொள். பூமியே, கேள்; இந்த ஜனங்கள் என் வார்த்தைகளைக் கேளாமலிருந்து, என் நியாயப்பிரமாணத்திற்கு செவிகெடாமல் அதை வெறுத்து விடுகிறார்கள்; அவர்கள் மேல் நான் அவர்கள் நினைவுகளின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன்

இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் மூலம் தேவனுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை பெற்றவர்களின் மூன்று நிலைகள். 1 தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் 2 தேடுகிறவர்கள் 3 மற்றவர்கள்

1 தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் :- தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தேவ நீதியை அடைந்திருக்கிறார்கள். 2 தேடுகிறவர்கள்:- தேவ நீதியை தேடுகிறவர்களின் ஆவிக்குரிய இடறுதல்களில் விழுந்துகொண்டிருக்கிறார்கள்.

1 தேவ நீதியைத் தேடாமல் தங்கள் சுய நீதியை நிலை நிறுத்த முயற்சி செய்தல்.

2 . நியாயப்பிரமாண நீதியின் கிரியைகளின் மூலம் நீதிப்பிரமாணத்தை தேடுவது.

3. முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடாமல், பரலோகத்தில் வாசல் கதவுகளை தொடர்ந்து தட்டிக்கொண்டிருப்பது.

4. தேவனுடைய சித்தத்தை செய்யாமல் தங்களது தேவைகள் சந்திக்கப்பட தேவனிடம் கேட்பது.

5. முதலாவது தேவனுடைய நீதியைத்தேடாமல் தங்கள் சுய விருப்பங்களை தேடி அவைகளை அடையும்படி தேவனை நோக்கி கேட்பது.

6. மூலைக்கல்லில் இடறுவதற்கு அறியாமைதான் மூலக்கார ணம் ஏனென்றால் அவர்கள்

தேவ அறிவை வெறுத்தார்கள்.

7. ஆவிக்குரிய வாழ்க்கையில் நற்கிரியைகள் இல்லாத பொழுது அறியாமையின் ஆழத்திற்கு செல்லுவது.

8 இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் உடன் படிக்கையின் மூலம் நற்கிரியைகள் செய்யும் போது அவைகள் எந்த ஒரு மனிதனையும் எந்த சூழ்நிலையிலும் தேவ நிதியை அடைய வழி நடத்தும்

3. மற்றவர்கள்:- சூதும் வங்சகமுகமான தந்திரமுள்ள போதகமாகிய பல விதமான காற்றுகளைப் பின்பற்றாமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு, தேவன் ஒவ்வொரு அவயவங்களுக்கும் பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப்பிரமாணத்தில் நிலைத்திருந்து, முழு சரீர வளர்ச்சியை ஏற்படுத்தி தேவ சித்தத்தை நிறைவேற்றுவதினால் தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள முடியும் இரு மனமாகிய சந்தேக காற்றை பின்பற்றாமல் ஒரு மனமாகயிருந்து முழு விசுவாசத்துடன் நற்கிரியைகள் செய்து தேவ ஞானத்தை சுதந்தரித்துக்கொள்ள முடியும்

இந்த நாள் வரைக்கும் காட்டுக் கழுதைகள் போல தங்கள் மதவெறியின் போதகத்தை பின்பற்றி தன் இச்சையாக திரிந்து கொண்டிருப்பவர்கள் தங்களுடைய ஆவி, ஆத்துமாவில், அறிவு, புத்தி, ஞானம், இவைகளைக் கொடுத்து, தங்களை வழி நடத்துகிற உன்னதமான தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து அன்புடன் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்

இந்நாள் வரைக்கும் இவர்கள் தேவ நீதிக்கு கீழ்ப்படியாமல் தங்கள் மனதை கடினப்படுத்தியிருக்கிறார்கள், இவர்கள் நியாத் தீர்ப்புக்கு தப்புவதில்லை இவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து எப்பொழுதும் தீமை செய்வதிலிருந்து மனந்திரும்புகிறார்களோ அப்பொழுது அவர்கள் மீண்டும் இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியும்

தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து சமைக்கப்பட்டு இந்த புஸ்தகத்தில் புசிக்க ஏற்றபடி / அவரவர் உட்கொள்ளும் அளவுக்கேற்றபடி / தன்மைக்கேற்றபடி பரிமாறப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தேவனுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் இந்த விருந்தை புசிக்க அபாத்திராக போனார்கள். ஆனால் தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள் ஒரு சிலர் இயேசு கிறிஸ்து ராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில் கலந்து கொண்டு இந்த தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை பல ருசியுள்ள தேவ வார்த்தைகளின் தலைப்புகளாக புசித்து, அதன் சுவைகளை உணர்ந்து கொண்டபடியால், ஆவி, ஆத்துமாவில் மறுரூபமடைந்து, தங்களுக்கு கொடுத்த தேவ சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம் ஜெயங்கொள்ளுகிறவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துகிறார்கள்.

அவர்கள் தங்களுக்கு வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொண்டு பரலோக இராஜ்ஜியத்தின் ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்கும் மணவாளனாகிய கிறிஸ்துவுடன் தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுகிறார்கள்.. ஆமென்.



இந்து முறைப்படி பூசாரி வம்சத்தில் பிறந்து என் சிறுவயதிலே பெற்றோர் மரணமடைந்ததால், வறுமையின் காரணமாக கோவையில் உள்ள ஒரு அநாதை இல்லத்தில் கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்டேன். கடந்த நான்பது வருடங்களாக தேவனுடைய வார்த்தைகளைக் கண்டு,கேட்டு, உணர்ந்துகொண்டபடியால்; பரலோக இராஜ்யத்தினுடைய உவமைகளில் உள்ள இரகசியங்களின் நன்மை தீமைகளை பகுத்தறிவதின் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை ஆவி,ஆத்துமாவில் புசித்து மறுரூபமடைந்தேன்.

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின்

## விருந்து புஸ்தகங்களின் தலைப்புகள்

**1.** பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நின்று கொண்டிருக்கிறது. மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது.

2. தேவனுடைய வீட்டிலே நியாயத்தீர்ப்பு துவங்குகிறது

3. தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

**4.** கிறிஸ்துவின் ஜீவ அப்பங்களை புசிக்கும் மூன்றுவகையான ஜனங்கள்

5. ஆவி,ஆத்துமாவின் மறுபிறப்பும் சரீரத்தின் உயிர்தெழுதலும்

6. நித்திய ஜீவ வார்த்தைகளினால் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

**7.** தேவனுடைய வெளிப்பாடுகளின் மூல உபதேசங்கள்

**8.** தேவனுடைய வெளிப்பாடுகளின் நீதியின் உபதேசங்கள்

**9.** பூமியின் நான்கு திசைகளிலிருந்து நான்கு வகையான விசுவாசங்கள்

**10.** இந்த மனுஷகுமாரன் யார்?

11. ஆவிக்குரிய இஸ்ரவேலர்களின்/யூதர்களின் அடையாளங்கள்

12. தேவனும் மனிதனும் கேட்ட எட்டு கேள்விகள்

**13** தேவனுடைய நாமத்தை பின்தொடர்கிற நாண்கு வகையான ஜனங்கள்

**14** ஞான அர்த்தமுள்ள சீயோனின் வெளிப்பாடுகள்

**15** தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காக தேவனுடைய இராஜ்யத்தின் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.

**16** கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்.

**17** தேவனுடைய இராஜ்யமாகிய ஆயிரம் ஆண்டு ஆட்சியின் தேர்தல் ஆணையம் அறிவிக்கப்பட்டு உபத்திரவ காலத்திற்கு நடைமுறைக்கு வருகிறது.

## 18 கிறிஸ்தவ மதத்தினால் போதிக்கப்பட்ட கற்பனைகள் V/S தேவனுடைய நீதியின் பிரமாணங்கள்

கிறிஸ்தவ மதத்தின் மூலம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனைகளுக்கு; கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவனுடைய நீதியின் பிரமாணங்கள்.

19 கிறிஸ்துவின் மூல உபதேச வசனங்கள் V/S தேவனுடைய நீதியின் பிரமாணங்கள் / கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களுக்கு கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவனுடைய நீதியின் பிரமாணங்கள்.

20 முதலாம் உடன்படிக்கை V/S இரண்டாம் உடன்படிக்கை

21 உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானவரின் சாட்சிகள்.

இந்த புஸ்தகங்களின் தலைப்புக்கள் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து சமைக்கப்பட்டு,புசிக்க ஏற்**றபடி/ அவரவர் உட்கொள்**ளும் அளவுக்கேற்**றபடி/தன்மைக்**கேற்**றபடி பரிமாறப்படுகிறது.**

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால்** தேவனுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் இந்த விருந்தை புசிக்க அபாத்திராக போனார்கள்.

ஆனால் தேவனால் முன் கு**றிக்கப்பட்டவர்க**ளிள் ஒரு சிலர், **இயேசு கிறிஸ்து இராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில்/ ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண** விருந்தில் கலந்து கொண்டு; இந்த தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாக புசிக்கிறார்கள்.

அதன் சுவைகளை **உணர்ந்து கொண்டவர்கள்,ஆவி,ஆத்துமாவில்,** மறுரூபமடைந்து: தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுத்த தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஆட்சி அதிகாரங்களை பிரதிபலனாக பெற்றுக்கொள்ளுகிறார்கள்.